# 6. தமிழ்ச்சான்றோர் பற்றிய செய்திகள்

பாவேந்தர், டி.கே.சிதம்பரநாதர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கண்ணதாசன், காயிதே மில்லத், தாராபாரதி, வேலுநாச்சியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், முடியரசன், தமிழ் ஒளி, உருத்திரங்கண்ணனார், கி.வா.ஜகந்நாதர், நாமக்கல் கவிஞர்

## பாவேந்தர்

புதுசு

**குடும்ப விளக்கு**

ஒன்பதாம் வகுப்பு - செய்யுள்

Budha

### பாரதிதாசன்

- பாரதிதாசனின் இயற்பெயர் கனக.சுப்புரத்தினம்.
- இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார்.
- பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள்.
- இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.
- இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

### சிறந்த தொடர்

பெண்ணெனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது

### குடும்ப விளக்கு

- குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது.
- கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது.
- குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும்.
- இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்புள்ளது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"பிசிராந்தையார்" எனும் நாடக நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் (CCSE2T/2024)
அ) பாவேந்தர் பாரதிதாசன்
ஆ) கவிஞர் வாணிதாசன்
இ) கவியரசர் கண்ணதாசன்
ஈ) கவிஞர் முடியரசன்
உ) விடை தெரியவில்லை

'பெண் எனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது' - எனப் பாடியவர் (CCS4T-2022)
அ) பாரதியார் ஆ) பசுவய்யா
இ) பாரதிதாசன் ஈ) நாமக்கல் கவிஞர்
உ) விடை தெரியவில்லை

### குடும்ப விளக்கு
- பாரதிதாசன்

புதுமைக் கருத்துகளை இயம்பும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்தவையே மறுமலர்ச்சி இலக்கியங்கள். இயற்கையைப் போற்றுதல், தமிழுணர்ச்சி ஊட்டுதல், பகுத்தறிவு பரப்புதல், பொதுவுடைமை பேசுதல், விடுதலைக்குத் தூண்டுதல், பெண்கல்வி பெறுதல் போன்ற பாடுபொருள்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, பாவேந்தர் பாரதிதாசனின் குடும்பவிளக்கு.

கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
விளைவது நவில வோநான்!

வானூர்தி செலுத்தல் வைய
மாக்கடல் முழுது மளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
அனைவர்க்கும் பொதுவே! இன்று
நானிலம் ஆட வர்கள்
ஆணையால் நலிவு அடைந்து
போனதால் பெண்களுக்கு

விடுதலை போனது அன்றோ!

இந்நாளில் பெண்கட்கு எல்லாம்
ஏற்பட்ட பணியை நன்கு
பொன்னேபோல் ஒருகை யாலும்
விடுதலை பூணும் செய்கை
இன்னொரு மலர்க்கை யாலும்
இயற்றுக! கல்வி இல்லா
மின்னாளை வாழ்வில் என்றும்
மின்னாள் என்றே உரைப்பேன்!

சமைப்பதும் வீட்டு வேலை
சலிப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கே ஆம் என்று கூறல்
சரியில்லை; ஆடவர்கள்
நமக்கும் அப் பணிகள் ஏற்கும்
என்றெண்ணும் நன்னாள் காண்போம்!
சமைப்பது தாழ்வா? இன்பம்
சமைக்கின்றார் சமையல் செய்வார்!

உணவினை ஆக்கல் மக்கட்கு!
உயிர்ஆக்கல் அன்றோ? வாழ்வு
பணத்தினால் அன்று! வில்வாள்
படையினால் காண்ப தன்று!
தணலினை அடுப்பில் இட்டுத்
தாழியில் சுவையை இட்டே
அணித்திருந் திட்டார் உள்ளத்(து)
அன்பிட்ட உணவால் வாழ்வோம்!

சமைப்பது பெண்க ளுக்குத்
தவிர்க்கஒணாக் கடமை என்றும்
சமைத்திடும் தொழிலோ, நல்ல
தாய்மார்க்கே தக்கது என்றும்
தமிழ்த்திரு நாடு தன்னில்
இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப் போதில் நீக்கவேண்டில்
பெண்கல்வி வேண்டும் யாண்டும்!

(குடும்ப விளக்கின் இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.)

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பாரதிதாசன் 'குடும்பவிளக்கு' என்னும் நூலில் எப்பகுதியில் 'விருந்தோம்பல்' எனும் தலைப்பில் கவிதை படைத்துள்ளார்? (EO4GS-2022)

அ) ஐந்தாம் பகுதி
ஆ) முதல் பகுதி
இ) நான்காம் பகுதி
ஈ) இரண்டாம் பகுதி
உ) விடை தெரியவில்லை

**பாடலின் பொருள் :**

கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவைதான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல கல்வி அறிவிலாத பெண்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள். கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும் அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன்.

சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை, அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். "வாழ்க்கை" என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று. அடுப்பில் நெருப்பு மூட்டி சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம்பெறுகிறது.

சமைக்கும் பணி, பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும் அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்' என்றவர் (CCS4T-2022)

அ) நாமக்கல் கவிஞர்
ஆ) சுரதா
இ) பாரதிதாசன்
ஈ) பாரதியார்
உ) விடை தெரியவில்லை

**பழசு**

## தமிழ் வளர்ச்சி

பத்தாம் வகுப்பு - செய்யுள்

1891 April 29

பு. அ. பெரியசாமியிடம் பாரதிதாசன் தமிழ் பயின்றார்.

**பாரதிதாசன்**

பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் **சுப்புரத்தினம்**. இவர் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாள் புதுவையில் பிறந்தார். **தந்தை கனகசபை**, தாய் **இலக்குமி**. பாரதியின்மேல் கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். இவர் **பாவேந்தர்**, **புரட்சிக்கவிஞர்** ஆகிய சிறப்புப்பெயரால் வழங்கப்படுகிறார். **குடும்பவிளக்கு, இருண்டவீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு** முதலியன இவர்தம் படைப்புகளாம். பாரதிதாசன் பரம்பரை என்றொரு கவிஞர் பரம்பரையே அவர் காலத்தில் உருவானது. தமிழக அரசு, பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியுள்ளது. ஆண்டுதோறும் சிறந்த கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருது வழங்கி வருகிறது; திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்துச் சிறப்புச் சேர்த்துள்ளது.

### தமிழ் வளர்ச்சி

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

- பாவேந்தர் பாரதிதாசன்.

**பொருள் :**

தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல்வேண்டும். இலக்கண நூல்களைப் புதிதாகப் படைத்தல்வேண்டும். உலகின் புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி விளக்கப் படங்களுடன் நூல்களாக்கிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும். வறுமையினால் தமிழன் ஒருவன் கல்லாத நிலை ஏற்படுமானால், இங்குள்ளோர் நாணம் அடைதல்வேண்டும். பல்வேறு துறை நூல்களைப் பிறர் துணையின்றி எல்லாரும் படித்தறிந்துகொள்ளும் வகையில், தமிழில் வெளியிடல்வேண்டும். தமிழறிவை மதங்களுக்குள் அடக்காமைவேண்டும். இலவச நூல்நிலையங்கள் ஊர்தோறும் ஏற்படுத்தல்வேண்டும். தமிழின் பெருமைகளைக் கூறுவதிலேயே காலம் கழித்தோம்; குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைத்தோமில்லை; உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்ப்போம், வாரீர்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்
-இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் (SGHGT-2017)

அ) அழகின் சிரிப்பு
ஆ) **தமிழ் வளர்ச்சி**
இ) இளைஞர் இலக்கியம்
ஈ) இருண்ட வீடு

**பழசு**

## இக்காலக் கவிதைகள்

ஒன்பதாம் வகுப்பு - உரைநடை

தமிழ், தமிழர், தமிழுணர்வு, சமுதாய மறுமலர்ச்சி, பெண்விடுதலை, திராவிட இயக்கச் சிந்தனை, பொதுவுடைமை முதலியனவற்றைப் பாரதிதாசன் கவிதைகள் வெளிப்படுத்தின.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே

எனத் தமிழர் எழுச்சிபெற விழையும் பாரதிதாசன்,

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம்
இல்லானும் அங்கில்லை பிறர்நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே

எனப் பொதுவுடைமையை விரும்பி வரவேற்கிறார்.

**புதுசு**

## பாரதிதாசன் கவிதைகள்

பத்தாம் மற்றும் ஒன்பதாம் வகுப்பு

அறைக்குள் யாழிசை
ஏதென்று சென்று
எட்டிப் பார்த்தேன்;
பேத்தி,
நெட்டுருப் பண்ணினாள்
நீதிநூல் திரட்டையே.

- பாரதிதாசன்

***

"இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள்கூடி
இரையுண்ணும்"

தமிழின் இனிமை

கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

— பாரதிதாசன்

- பாரதிதாசன்
(இக்கவிதையில் பகிர்ந்துண்ணல் பதிவு செய்யப்பட்டுள்ளது.)

•••

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு எனஎ ரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!

கடலிலே கோடி கோடிக் கதிர்க்கைகள் ஊன்றி நின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ அமைந்தனை! பரிதி வாழி!

- பாரதிதாசன்

•••

வான் தந்த பாடம்
எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு,
நீ அதில் சிற்றெறும்பே,
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித் தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே!

- பாவேந்தர் பாரதிதாசன்

The Lesson the Sky Teaches
How Vast is the sky!
Think you of yourself;
The earth is a tiny
Guava fruit; you like all
Others are a tiny ant
In it? is that not so?
Why talk madly of
The high and the low?
Pavendar Bharathidasan
(translated by P. Parameswaran)

•••

மகள் சொல்லுகிறாள்:-

அம்மா என் காதுக்கொரு தோடு - நீ
அவசியம் வாங்கி வந்து போடு!
சும்மா இருக்க முடியாது - நான்
சொல்லி விட்டேன் உனக்கு இப்போது!

தாய் சொல்லுகிறாள்:-

காதுக்குக் கம்மல் அழகன்று - நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகுபணிவாய் - நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய்!

மகள் மேலும் சொல்லுகிறாள்:-

கைக்கிரண்டு வளையல் வீதம் - நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
பக்கியென் றென்னை யெல்லோரும் - என்
பாடசாலையிற் சொல்ல நேரும்!

தாய் சொல்லும் சமாதானம்:-
வாரா விருந்து வந்த களையில் - அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆராவமுதே மதி துலங்கு - பெண்ணே
அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு!

பின்னும் மகள் :
ஆபர ணங்கள் இல்லை யானால் - என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால்?
கோபமோ அம்மா இதைச் சொன்னால் - என்
குறைதவிர்க்க முடியும்

அதற்குத் தாய் :
கற்பது பெண்களுக்கா பரணம் - கெம்புக்
கல்வைத்த, நகைதீராத ரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு - தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு!

- பாரதிதாசன்

பழசு

## பாரதிதாசன் கவிதைகள்
ஒன்பதாம் வகுப்பு

தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை
- பாரதிதாசன்

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை - இது யார் கூற்று? (CCS2T-2018)

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' - யார் கூற்று? (JSTT3 - 2014)

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) முடியரசன்

'தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை' என முழங்கியவர் (EOGT-2013)

அ) பாரதியார் ஆ) கவிமணி தேசிக விநாயகம்
இ) பாரதிதாசன் ஈ) நாமக்கல் கவிஞர்

•••

பாரதியார் உலககவி! அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று

விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற்
கண்டோம்.

- பாரதிதாசன்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'ஓருருக்கொருநாட்டுக் குரிய தான
ஒட்டைச் சாண் நினைப்புடையர் அல்லர்' யார்?(GR5AT-2017)
அ) கவிமணி ஆ) கண்ணதாசன்
இ) பாரதிதாசன் ஈ) பாரதியார்

...

## தமிழியக்கம்

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திரு நீ! இளந்தமிழா,
கண்விழிப்பாய்! இறந்தொ ழிந்த
பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை
அனைத்தையும்நீ படைப்பாய்! இந்நாள்
தொண்டுசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித்தெ ழுந்தே!

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெலாம் உன்றன் வெற்றி!
அயராதே! எழுந்திருநீ! இளந்தமிழா,
அறஞ்செய்வாய்! நாமடைந்த
துயரத்தைப் பழிதன்னை வாழ்வினிலோர்
தாழ்மையினைத் துடைப்பாய் இந்நாள்
செயல்செய்வாய் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் சீறி வந்தே.

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்தீமை
உனக்குவரும் தீமை அன்றோ!
பிணிநீக்க எழுந்திருநீ இளந்தமிழா,
வரிப்புலியே பிற்றை நாளுக்
கணிசெய்யும் இலக்கியம் செய்! அறத்தைச்செய்!
விடுதலைகொள் அழகு நாட்டில்!
பணிசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் பழநாட் டானே.

எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த
சிங்கமே! இன்றே, இன்னே
புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய்
புத்துணர்வைக் கொணர்வாய் இங்கே
அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் அழகு காப்பாய்
இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும்
முதற்பணியாம் எழுக நன்றே!

- பாரதிதாசன், தமிழியக்கம்.

பாரதிதாசன்

புதுசு

## இன்பத்தமிழ்
ஆறாம் வகுப்பு

**பாரதிதாசன்**

- பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.
- பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.
- தம் கவிதைகளில் **பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு** முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார். எனவே, இவர் **புரட்சிக்கவி** என்று போற்றப்படுகிறார்.
- இவர் **பாவேந்தர்** என்றும் சிறப்பிக்கப்படுகிறார்.

### இன்பத்தமிழ்
**- பாரதிதாசன்**

நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. தமிழ் வணக்கம் தற்கால இலக்கிய மரபாக ஆகிவிட்டது. **பாரதிதாசன் தமிழைப் பலவிதங்களில் போற்றுகிறார்.** கண்ணே மணியே என்று குழந்தையைக் கொஞ்சுவது உண்டு. அதுபோல அவர் நம் செந்தமிழுக்குப் பெயர்கள் பல சூட்டி மகிழ்கிறார்.

தமிழுக்கும் அமுதென்றுபேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!

- பாரதிதாசன்

(இப்பாடல், 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூலில் 'தமிழ்' என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.)

**பாடலின் பொருள்**

- தமிழுக்கு அமுது என்று பெயர். இன்பம் தரும் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது.
- தமிழுக்கு நிலவு என்று பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது.

- தமிழுக்கு மணம் என்று பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும்.
- தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான பால் போன்றது. நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.
- தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய வானம் போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் தேன் போன்றது.
- தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதி மிக்க வாள் ஆகும்.

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

இன்பத்தமிழ் பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக. (FAGS/2022)

a) விளைவுக்கு — 1. பால்
b) அறிவுக்கு — 2. வேல்
c) இளமைக்கு — 3. நீர்
d) புலவர்க்கு — 4. தோள்

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 3 | 1 | 4 | 2 |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

## புதுசு
## இன்பத்தமிழ்க் கல்வி
ஏழாம் வகுப்பு

**பாரதிதாசன்** 1891 ஏப்ரல் 29

- கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதிதாசன்.
- இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றைப் படைப்பதில் வல்லவர்.
- **பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம்** உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய **பிசிராந்தையார்** என்னும் நாடகநூலுக்குச் **சாகித்திய அகாடமி** விருது அளிக்கப்பட்டது. 1969

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாடக நூல் எது? (CCS3T-2023)
அ) பாண்டியன் பரிசு
ஆ) **பிசிராந்தையார் நாடகம்**
இ) குடும்ப விளக்கு
ஈ) பூங்கொடி நாடகம்
உ) விடை தெரியவில்லை

பாரதிதாசன் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்குக் கொடுக்கப்பட்ட விருது (EO4GS-2022)
அ) **சாகித்திய அகாடமி விருது** → 1969
ஆ) குடியரசுத்தலைவர் விருது
இ) சோவியத் நாட்டு விருது
ஈ) தாமரைத் திரு விருது
உ) விடை தெரியவில்லை

பாரதிதாசனார் இயற்றிய நாடக நூல் எது? (CCS4T-2019)
அ) கண்ணகி புரட்சிக் காப்பியம்
ஆ) **பிசிராந்தையார்**
இ) சுவரும் சுண்ணாம்பும் → சாதா
ஈ) பாண்டியன் பரிசு

பாரதிதாசன் எழுதிய பிசிராந்தையார் என்னும் நூல் (JGT-19)
அ) கவிதை ஆ) உரைநடை
இ) சிறுகதை ஈ) **நாடகம்**

பாவேந்தர் பாரதிதாசனால் எழுதப்பட்ட "சாகித்திய அகாதெமிப்" பரிசு பெற்ற நாடக நூல் எது ? (EO3GT-2019)
அ) சேர தாண்டவம் ஆ) குடும்ப விளக்கு
இ) குறிஞ்சித் திரட்டு ஈ) **பிசிராந்தையார்**

### இன்பத்தமிழ்க் கல்வி
**- பாரதிதாசன்**

பாரதிதாசன் கவிதை எழுதுவதற்காகத் தாளையும் எழுதுகோலையும் எடுத்தார். எதைப்பற்றி எழுதுவது எனச் சிந்தித்தார். வானம், ஓடை, காடு, தென்றல், மயில் போன்ற இயற்கைப் பொருள்கள் எல்லாம் அவர் கருத்தைக் கவர்ந்தன. எனினும் புரட்சிக்கவிஞராகிய பாவேந்தர் தமிழரின் இன்னல் தீர்க்கும் வழி ஒன்றைக் கவிதையாகப் படைத்தார். அதை நாமும் படித்துச் சுவைப்போம்.

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்

சோலைக் குளிர்தரு தென்றல் வரும்பசுந்
தோகை மயில்வரும் அன்னம் வரும்
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்
மாணிக்கப் பரிதி காட்சி தரும்
வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
வெற்பென்று சொல்லி வரைக என்னும்
கோலங்கள் யாவும் மலை மலையாய் வந்து
கூவின என்னை - இவற்றிடையே

இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே

இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்!

(பாரதிதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பிலிருந்து தமிழ்ப்பேறு என்னும் தலைப்பில் உள்ள பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.)

**பாடலின் பொருள்**

கவிதை எழுத ஏடு ஒன்று எடுத்தேன். என்னைக் கவிதையாக எழுதுக என்று வானம் கூறியது. நீரோடையும் தாமரை மலர்களும் "எங்களைக் கவி ஓவியமாகத் தீட்டுக" என்றன. காடும் வயல்களும் கருநிற மேகங்களும் என் கண்களைக் கவர்ந்து, கவிதையில் இடம்பெற முயன்றன. ஆடும் மயில் போன்ற பெண்கள் "அன்பினைக் கவிதையாக எழுதுக" என்றனர்.

சோலையின் குளிர்ந்த தென்றல் வந்தது. பசுமையான தோகையையுடைய மயில் வந்தது. அன்னம் வந்தது. மாணிக்கம் போல் ஒளி வீசி மாலையில் மேற்குத் திசையில் மறைகின்ற கதிரவனும் வந்தான். வேல் ஏந்திய வீரர்கள், "மலை போன்ற எங்களது தோள்களின் அழகினை எழுதுங்கள்" என்றனர். இவ்வாறு அழகிய காட்சிகள் எல்லாம் பெருந்திரளாக வந்து தங்களைக் கவிதையாக எழுதுமாறு கூறின.

ஆனால், துன்பத்தில் கிடக்கும் என் தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கிடக்கிறார்கள். அந்தக் காட்சி என் மனத்தில் இரக்கத்தை உண்டாக்கி, என் உயிரில் வந்து கலந்து விட்டது. இத்துன்பம் நீங்க அனைவரும் இன்பத்தமிழ்க் கல்வியைக் கற்றவர்கள் என்னும் நிலை ஏற்பட வேண்டும். அந்நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பங்கள் நீங்கிடும். நெஞ்சில் தூய்மை உண்டாகிடும். வீரம் வரும்.

## பழசு — இசையமுது
ஆறாம் வகுப்பு

29/4/1891 இறப்பு 21-04-1964

**பாரதிதாசன்**

'புரட்சிக் கவிஞர்' எனவும், 'பாவேந்தர்' எனவும் புகழப்படுபவர் பாரதிதாசன். இவர்தம் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதைமீது கொண்ட காதலால், தம்முடைய பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு முதலியன இவர்தம் கவிதை நூல்கள். இவர் வாழ்ந்த காலம் 29.04.1891 முதல் 21.04.1964 வரை.

### இசையமுது

மழையே மழையே வா வா - நல்ல
வானப் புனலே வா வா - இவ்
வையத் தமுதே வா வா

தகரப் பந்தல் தண தண வென்ன
தாழும் கூரை சளசள வென்ன
நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்
நன்றெங் கும்கண கணகண வென்ன
(மழையே மழையே...)

ஏரிகுளங்கள் வழியும்படி, நாடு
எங்கும் இன்பம் பொழியும்படி, பொடி
வாரித்தூவும் பூவும் காயும்
மரமும் தழையும் நனைந்திடும்படி
(மழையே மழையே...)

தழையா வெப்பம் தழைக்கவும் மெய்
தாங்கா வெப்பம் நீங்கவும்
உழுவார் எல்லாம் மலைபோல் எருதை
ஓட்டிப் பொன்னேர் பூட்டவும்
(மழையே மழையே...)

- பாரதிதாசன்

## பழசு — எங்கள் தமிழ்
ஏழாம் வகுப்பு

**பாரதிதாசன்**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம் பாரதியார்மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் எனத் தன் பெயரை மாற்றி அமைத்துக்கொண்டார். |
| பெற்றோர் | : | கனகசபை - இலக்குமியம்மாள் |
| கல்வி | : | தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியவற்றில் புலமை மிக்கவர் |
| இயற்றியவை | : | குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேர தாண்டவம், இருண்டவீடு, தமிழச்சியின் கத்தி, பிசிராந்தையார், குறிஞ்சித் திட்டு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம் முதலியன. |
| காலம் | : | 29.04.1891-21.04.1964 |

### எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு
இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிரென்ப தாலே - வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ்மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு
தமிழ்என்று தோள்தட்டி ஆடு - நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு!

- பாரதிதாசன்

(இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுதியில் எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.)

**பொருள்:**

இனிமை, இன்பம், அமுது, கனிச்சாறெனத் திகட்டும் சுவைமிக்கது எம் தமிழ். இத்தமிழ்ச்சொல்லினும் சுவைமிக்க சொல் வேறெங்கும் இல்லை. அச்சுவைமிக்க மொழியின்மீது தமிழ் மக்களுக்குக் காதல் மிக உண்டு. ஆதலால், தமிழ் எங்கள் உயிரென்பதனாலே எவரையும் வெல்லுந்திறமுண்டு இப்புவிமேலே. எம் தமிழ் எங்கள் விழியாதலால் அதன் ஒளி குன்றினால் நாடே இருளில் மூழ்கிவிடும். எனவே, தமிழிருக்கும்வரையே தமிழ் மக்களும் இருப்பர். ஆதலால், நாளும் அதற்குத் தொண்டுசெய்வோம். நம் வாழ்வு தமிழென்று தோள்தட்டி ஆடுவோம்; அது தரணியில் நாளும் வெற்றிபெறப் பாடுபடுவோம்.

## பழசு — விழுதும் வேரும்

எட்டாம் வகுப்பு

**பாரதிதாசன்**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம் |
| பெற்றோர் | : | கனகசபை - இலக்குமி |
| ஊர் | : | புதுச்சேரி |
| காலம் | : | 29.04.1891 முதல் 21.04.1964 வரை |
| சிறப்புப் பெயர்கள் | : | பாவேந்தர், புரட்சிக்கவிஞர் |
| சிறப்பு | : | பாரதியாருடன்கொண்ட நெருங்கிய தொடர்பினால் பாரதிதாசன் எனத் தன்பெயரை அமைத்துக்கொண்டார். தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர். |

**விழுதும் வேரும் (அழகின் சிரிப்பு)**

தூலம்போல் வளர்கி ளைக்கு
விழுதுகள் தூண்கள்! தூண்கள்
ஆலினைச் சுற்றி நிற்கும்
அருந்திறல் மறவர்! வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
மண்டிய பாம்பின் கூட்டம்!
நிலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்!

- பாரதிதாசன்

**பொருள் :**

தூலம்போல வளர்ந்துள்ள ஆலங்கிளைக்கு விழுதுகள் தூண்களாகத் திகழ்கின்றன. தூண்களெல்லாம் ஆலமரத்தைச் சுற்றி நிற்கும் வீரர்களாகக் காட்சி அளிக்கின்றன. வேர்கள் எல்லாம் தரையில் வாலை ஊன்றித் தோன்றும் பாம்புக் கூட்டம்போல் காணப்படுகின்றன. வானை மறைக்கும் ஆலமரம் ஒற்றைக்காலுடன் விரிந்து பரந்த பந்தலாகத் தோன்றுகின்றது.

### TNPSC Old Questions
### பொதுத்தமிழ்

"நிலவான் மறைக்கும் ஆல்தான் ஒற்றைக்கால் நெடிய பந்தல்" - என்ற வரிகளில் "ஒற்றைக்கால் நெடிய பந்தல்" எனக் குறிக்கப்பெறுவது எது? (EO4GT-2019)

அ) மூங்கில் மரம் ஆ) தேக்கு மரம்
இ) ஆல மரம் ஈ) அரச மரம்

## பழசு — பாரதிதாசன்

எட்டாம் வகுப்பு

**நான் விரும்பும் கவிஞர் : பாரதிதாசன்**

**முன்னுரை**

"கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு; நானோர் தும்பி" என்று தமிழ்க்காதல் கொண்டு, "உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என்ற கொள்கையை உயிர்மூச்சாய்ப் பெற்றவர்; தமிழ்ச்சொல்லால் பாடல் இயற்றி, இருபதாம் நூற்றாண்டுக் கவிதைவானில் ஒளிநிலவாய்ப் பவனிவந்த பெருங்கவிஞராக விளங்கியவர் பாரதிதாசன். அவர், அறியாமை இருளில் முடங்கிக் கிடந்தவர்களைப் பகுத்தறிவு ஒளிபெற்று விழிப்புறச்செய்தார்; கொள்கையற்றவர்களைக் கொள்கை உரம்பெற்று நிமிர்ந்து நிற்கச் செய்தார்.

### TNPSC Old Questions
### பொதுத்தமிழ்

"கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு; நானோர் தும்பி!" என்று தமிழ்க் காதல் கொண்டு வாழ்ந்தவர் யார்? (EO3GT-2019)

அ) வரதராசனார் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

"உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என்ற கொள்கையை உயிர்மூச்சாய்ப் பெற்றவர் - யார்? (CCS2T-2018)

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கவிமணி

"கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு; 'நானோர் தும்பி!"
- என்று தமிழின் மீது காதல் கொண்டு பாடிய கவிஞர் (SGHGT-2017)

அ) பாரதியார் ஆ) சுப்புரத்தினம்
இ) வெ. இராமலிங்கம் ஈ) சுரதா

**பிறப்பும் சிறப்பும்**

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் பொய்யாமொழியாரின் பொன்மொழிக்கிணங்க, புரட்சிப்பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில்



அழைக்கப்படும்
புரட்சிக்கவிஞர் – பெரியார்
புரட்சிக்கவி – அண்ணா
பாரதிதாசன் அஞ்சல்தலை – 2001 Oct-9
சாகித்ய அகாடமி விருது பெற்ற ஆண்டு – 1969
நாட்டுடைமை ஆக்கப்பட்டது – 1990

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 29.04.1891 ஆம் ஆண்டு பிறந்தார். கனகசபை என்பார் இவரின் தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர், துள்ளித்திரியும் தம் இளமைப்பருவத்தின் துடுக்கடக்கிப் பள்ளியில் சேர்ந்து, தித்திக்கும் முத்தமிழ்ப்புலமை பெற்றார்; தமிழாசிரியராய்ப் பணியாற்றினார். பாரதியாரால் 'சுப்புரத்தினம் ஓர் கவி' என்று தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டார். இவர், பாரதியின்பால் நாம்கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றி வைத்துக்கொண்டார். அவரின் எண்ணத்திலும் எழுத்திலும் பேச்சிலும் புரட்சியின் புதுத்துடிப்பைக் கண்ணுற்ற அறிஞர் உலகம் அவரைப் புரட்சிக் கவிஞர் என அழைத்து மகிழ்ந்தது.

### தமிழ்ப்பணி

பாவேந்தர் பாரதிதாசன் தம்வாழ்நாள் முழுவதனையும், தமிழின் மறுமலர்ச்சிக்காகவும் விழ்ச்சியுற்ற தமிழகத்தில் புத்தெழுச்சி காண்பதற்காகவும் தமிழரின் முன்னேற்றத்துக்குத் தடைக்கற்களாய் நிற்கும் அறியாமையை, மூடப்பழக்க வழக்கங்களை உடைத்தெறிவதற்காகவும் பாடுபட்டார். வீடெல்லாம், நாடெல்லாம், மக்களின் இதயக்கூடலெல்லாம், ஏடெல்லாம் இன்பத்தமிழ் மணக்கவேண்டும் என்று அல்லும் பகலும் அயராது தமிழ்ப்பணி ஆற்றினார்.

**சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளிபெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது** என்பதனை உணர்ந்த பாவேந்தர் புதிய சமுதாயத்தை உருவாக்குவதிலேயே தமது சிந்தனையைச் செலவிட்டார். இவரது புகழை **இசையமுது, குடும்ப விளக்கு, மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், படித்த பெண்கள், இளைஞர் இலக்கியம், குறிஞ்சித் திட்டு** முதலிய நூல் மலர்கள் மலர்ந்து நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

உவட்டாமல் இனிக்கும் பாடல் வரிகள்

**தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ்**
**எங்கள் உயிருக்கு நேர்!**

**இருட்டறையில் உள்ளதடா உலகம்**

**புதியதோர் உலகு செய்வோம் கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்**

என்னும் பாரதிதாசனின் பாடல்களை, நாம் பாடும்போது உவட்டாமல் இனிக்கின்றன

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'சூரிய ஒளி பெறாத செடியும் பகுத்தறிவு ஒளிபெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது' என உணர்ந்தவர் (EO3GT-2017)

அ) பாரதி ஆ) சுரதா
இ) **பாரதிதாசன்** ஈ) கவிமணி

"இருட்டறையில் உள்ளதடா உலகம்" எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்? (G2T-2015)

அ) பாரதியார் ஆ) **பாரதிதாசன்**
இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்

### முடிவுரை

பாரதிதாசன் தமிழ்க்கவி; தமிழரின் கவி; தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவி; தமிழரின் புகழ் மேதினியோங்க வேண்டுமெனப் பிறந்த கவி. அக்கவியின் கவிதைகளைக் கற்றுப் பயன் பெறுவோமாக! பாவேந்தர் பாடல்களைப் பாரெல்லாம் பரப்புவோமாக!

**பழகு**

## பாரதிதாசன் கவிதைகள்

எட்டாம் வகுப்பு

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சில் பிறந்தபத் திரிகைப் பெண்ணே"
- பாரதிதாசன்

***

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.
- பாரதிதாசன், அழகின் சிரிப்பு.

***

நூலைப்படி - சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி

காலையில்படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும்படி

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ்நான் மறை
பிறந்த தென்று சொல்லும்படி

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படித் தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி.
- பாரதிதாசன்.

டி.கே.சிதம்பரநாதர்

புதுசு

## திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

ஏழாம் வகுப்பு - துணைப்பாடம்

டி.கே.சிதம்பரநாதர்

- டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே.சிதம்பரநாதர் வழக்கறிஞர் தொழில் செய்தவர்; தமிழ் எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர்.
- இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்.
- இவர் தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார்.
- இவர் கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுகிறார்.
- 'திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்' என்னும் கட்டுரை இவரது இதய ஒலி என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

(இக்கட்டுரை ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன் டி.கே.சியால் எழுதப்பட்டது.)

திருநெல்வேலிச் சீமை என்று குறிப்பிடப்படுவது இன்றைய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் இணைந்த பகுதியாகும்.

ஒரு நாட்டில் காவியம் உண்டாகிக் கொண்டே இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது அவ்வளவு சரியல்ல. பொதுவாக, ஆயிரம் வருஷத்துக்கு ஒரு தடவை கவிஞன் பிறக்கிறான் என்று சொல்லுவார்கள். ஒருவகையாக அஃது உண்மைதான். கவி அவ்வளவு அருமை. ஆனால், கவியை அனுபவிக்கிற திறமை அவ்வளவு அபூர்வமான விஷயம் அல்ல; ஆண், பெண் எல்லோருமே அனுபவிக்கிற விஷயந்தான் அது.

திருநெல்வேலி ஜில்லா நெடுகிலும் உண்மையான கவிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாடல்களையும் மக்கள் அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

பாரதியார் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரம். எட்டையபுர சமஸ்தானம் நெடுகிலும் ஊர் ஊராய்ப் புலவர்களும் கவிராயர்களும் வாழ்ந்தனர். தேசிகவிநாயகனார் கன்னியாகுமரிப் பக்கம் - அதாவது நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்தவராய் இருந்தாலும் அவர் தமிழை அழுத்தமாக ஆர்வத்தோடு கற்ற இடம் திருநெல்வேலி நகர்தான்.

### கடிகைமுத்துப் புலவர்

கோயில்பட்டியிலிருந்து கிழக்கே எட்டு மைல் தூரத்தில்தான் பாரதியாரின் பிறப்பிடமாகிய எட்டையபுரம் இருக்கிறது. அங்கே சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர் கடிகைமுத்துப் புலவர். அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

### முக்கூடல் பள்ளு

மணியாச்சியிலிருந்து ஏழெட்டு மைல் தூரத்தில் தாமிரபரணி நதியும் சிற்றாறும் கலக்கிற இடம்தான் சீவலப்பேரி என்கிற முக்கூடல். முக்கூடல் பள்ளு என்னும் பிரபந்தம் முக்கூடலைப் பற்றியதுதான். சாதாரணமாக மழை பெய்யாத இடத்தில் மழை பெய்கிறது என்றால் குடியானவர்களுக்கு ஒரே கும்மாளி அல்லவா? அந்தக் கும்மாளி,

ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி - மலை யாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே

என்ற அடியிலே இருக்கிறது. குடியானவர்களுக்கு இடிமுழக்கம்தான் சங்கீதம்; மின்னல் வீச்சுதான் நடனம்.

### பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் மதுரைப் பக்கத்திலிருந்து பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெல்லைக்கு வந்தார். நெல்லையப்பர் கோவிலில் எழுந்தருளியுள்ள காந்திமதித் தாயைத் தரிசித்தார். ரொம்ப ரொம்ப உரிமை பாராட்டி, சுவாமியிடம் சிபாரிசு செய்யவேண்டும் என்று முரண்டுகிறார்.

### சீவைகுண்டம்

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப் போகிற மார்க்கத்திலே பதினெட்டாவது மைலில் ஆற்றுக்கு வடகரையில் சீவைகுண்டம் இருக்கிறது. பிள்ளைப்பெருமாள் சீவைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார்.

### நம்மாழ்வார்

ஆற்றுக்குத் தென்கரையில் நம்மாழ்வார் அவதார ஸ்தலமான ஆழ்வார்திருநகரி இருக்கிறது. பூர்வத்தில் இதற்குத் திருக்குருகூர் என்று பெயர். நம்மாழ்வார் தமது ஈடுபாட்டை ஆயிரம் தமிழ்ப்பாட்டில் (திருவாய்மொழியில்) வெளியிட்டார்.

### கொற்கை

கொற்கையில் சுமார் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னிருந்த ஒரு பெருங்கவிஞர் முத்தொள்ளாயிர ஆசிரியர். பல தேசங்களிலுமிருந்து வர்த்தகர்கள் வந்து முத்து வியாபாரம் செய்கிறதை அவர் பார்த்தார். மேற்கே ரோமாபுரி, கிரேக்கதேசம் முதல் கிழக்கே சைனா வரையும் கொற்கையிலிருந்தே முத்து போய்க் கொண்டிருந்தது. புலவர், முத்து வளத்தை நன்றாய் அனுபவித்தார்; பாடினார்.

### சீதக்காதி

காயல்பட்டணத்தில் இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன் சீதக்காதி என்ற பெரிய வாணிகர் இருந்தார். அவருடைய கப்பல்கள் பல தேசங்களுக்கும் சென்று வர்த்தகத்தின் மூலமாக மிகுந்த திரவியத்தைச் சம்பாதித்து வந்தன. அவர் தமிழ்ப் புலவர்களுக்குப் பெருங்கொடை கொடுத்து வந்தார். அவர் இறந்தபோது, புலவர்கள் இதயத்தில் இடிதான் விழுந்தது. நமசிவாயப் புலவர் என்பவர் என்ன ஆற்றாமையோடு அலறுகின்றார் பாருங்கள்:

பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப்பூதலத்தில்
நாமாது இருந்தென்ன நாமும் இருந்தென்ன நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைக்கரத்துச்
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே!

**திருச்செந்தூர்**

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் திருச்செந்தூருக்கு வந்து, நந்தவனங்களைப் பார்த்து அனுபவித்தார். ஏரிநீர் நந்தவனங்களில் கட்டிக் கிடப்பதால் சேல்மீன்கள் துள்ளிக் குதிக்கவும் பூஞ்செடி கொடிகளையே அழிக்கவும் தலைப்பட்டன என்று பாடியுள்ளார்.

**அண்ணாமலையார்**

இக்காலத்தில் பாடுகிற காவடிப்பாட்டெல்லாம் கழுகுமலை முருகன் மேல்தான். இக்காவடிச்சிந்தைப் பாடியவர் அண்ணாமலையார். காவடிப்பாட்டைக் கேட்க வேண்டுமானால், பம்பை, மேளம், ஆட்டம் எல்லாவற்றோடும் கேட்டால்தான் ரஸமும், சக்தியும் தெரியும்.

**சங்கரன்கோயில்**

சங்கரன்கோயில் பெரிய சிவஸ்தலம். அம்பாள் கோமதித் தாய். கோமதித் தாயைப் பற்றி உண்மையான பக்தியும் தமிழ்ப் பண்பும் வாய்ந்த ஒரு பாடல். அதைப் பாடியவர் திருநெல்வேலி அழகிய சொக்கநாதர்.

'வாடா' என அழைத்து வாழ்வித்தால் அம்ம உனைக்
கூடாதென் றார் தடுப்பார் கோமதித்தாய் ஈஸ்வரியே!

**கருவைநல்லூர்.**

சங்கரன்கோயிலுக்கு வடக்கே எட்டு மைலில் முக்கியமான ஸ்தலம் கருவைநல்லூர். இதற்குக் கரிவலம் வந்த நல்லூர் என்றும் பெயர். கோயிலும் சுற்று விதிகளும் அழகாய் அமைந்திருக்கின்றன. இத்திருத்தலத்தின் சிறப்பில் தோய்ந்த புலவர் ஒருவர் திருக்கருவை வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி என்ற மூன்று நூல்களைப் பாடியிருக்கிறார். அவற்றில் அநேக பாடல்கள் பக்தியும் செய்யுள் நயமும் நிறைந்து, பாடப் பாட நாவுக்கு இனிமை தந்து கொண்டிருக்கின்றன.

**குற்றாலம்**

கவி இல்லாமலே மனசைக் கவரக்கூடிய இடம் குற்றாலம் கோயில், அருவி, சோலை பொதிந்த மலை, தென்றல் எல்லாம் சேர்ந்து அமைந்திருப்பதைப் பார்த்தால், உலகத்திலேயே இந்த மாதிரி இடம் இல்லை என்றே சொல்லலாம். சுமார் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் திருஞான சம்பந்தர் இங்கு வந்தார். நுண் துளி தூங்கும் குற்றாலம் என்று பாடினார். மாணிக்கவாசகரும் ஒரு பாடல் பாடியிருக்கிறார் :

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யானவேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத் துறைகின்ற கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!

**குற்றாலக் குறவஞ்சி**

பிற்காலத்திலே எழுந்த தமிழ் இலக்கியங்களில் முக்கியமானது குற்றாலக் குறவஞ்சி. அஃது உண்மையான தமிழ்ப் பண்பும் கவிப்பண்பும் வாய்ந்தது. இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் குற்றாலத்துக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ள மேலகரத்தில் வாழ்ந்துவந்த திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய நூல். தமிழ்க் கவியின் உல்லாச விளையாட்டு இன்னது என்று தெரிவதற்கு இதிலே ஒரு சிறு பாடலைப் பார்க்கலாம். குறி சொல்லுகிற பெண் குற்றாலமலையின் பெருமையைக் கொழிக்கிறாள்:

கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே!
கனகமகா மேருவென நிறகுமமலை அம்மே!
துயிலும் அவர் விழிப்பாகி அகிலம் எங்கும் தேடும்
துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே!

இப்பாட்டு, மலையிலுள்ள அருவிகளைப் போல் கும்மாளி போடுகிறது.

| புலவர் | இடம் |
|---|---|
| திரிகூடராசப்பக் கவிராயர் | மேலகரம் |
| அருணகிரிநாதர் | திருச்செந்தூர் |
| அண்ணாமலையார் | கழுகுமலை |
| அழகிய சொக்கநாதர் | திருநெல்வேலி |
| கடிகைமுத்துப் புலவர், பாரதியார் | எட்டையபுரம் |
| நம்மாழ்வார் | ஆழ்வார்திருநகரி (திருக்குருகூர்) |
| சீதக்காதி | காயல்பட்டணம் |

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

1925 – 1995

புதுசு

**ஒப்புரவு நெறி**

ஏழாம் வகுப்பு - உரைநடை

**குன்றக்குடி அடிகளார்**

- மக்கள் பணியையே இறைப் பணியாக எண்ணித்தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.
- குன்றக்குடி திருமடத்தின் தலைவராக விளங்கிய இவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர்.
- திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர்.
- நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'நுண் துளி தூங்கும் குற்றாலம்' என்று பாடியவர்
அ) அப்பர்
ஆ) சம்பந்தர்
இ) சுந்தரர்
ஈ) மாணிக்கவாசகர்
உ) விடை தெரியவில்லை



மாணி

தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது இவர்க்கு 1986ல் வழங்கப்பட்டது.

1989 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவர்க்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது

மணிமொழி, தமிழகம், மக்கள் சிந்தனை

அருளோசை, அறிக அறிவியல் உள்ளிட்ட சில இதழ்களையும் நடத்தியுள்ளார். இதழ்

## ஒப்புரவு நெறி

மனிதர்கள் தனித்து வாழப் பிறந்தவர்கள் அல்லர். சமுதாயமாகக் கூடி வாழ்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழப்பிறந்தவர்கள். பிறருக்கு உதவி செய்யும் பொழுது அவர்களுக்குத் தாழ்வு ஏற்படாவண்ணம் உதவுவதே சிறந்த பண்பாகும். அறநெறியில் பொருளீட்டித் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பதே ஒப்புரவு நெறியாகும்.

இந்த மானுடப் பிறவி தற்செயலாகவோ விபத்தின் காரணமாகவோ அமைந்தது அன்று. இஃது ஓர் அரிய வாய்ப்பு ஒரே ஒரு தடவை மட்டுமே வழங்கப் பெறும் வாய்ப்பு. இந்தப் பிறவியை மதித்துப் போற்றிப் பயன் கொள்ளுதல் கடமை. அதனால் எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பது அல்ல, எப்படி வாழ்ந்தோம் என்பதே கேள்வி. வாழ்ந்த காலம் எந்தமுத்திரையைப் பெற்றது? வாழ்ந்த காலம் ஏதாவது அடையாளங்களைப் பெற்றதா? நம் பெயர் காலந்தோறும் பேசப்படுமா என்றெல்லாம் சிந்திப்பவர்கள் வாழும்நெறி பற்றிக் கவலைப்படுவார்கள்; குறிக்கோளுடன் வாழத்தலைப்படுவார்கள்.

### வாழ்வின் குறிக்கோள்

வாழ்க்கை குறிக்கோள் உடையது. அக்குறிக்கோள் எது? தாம் வாழ்வதா? தாம் வாழ்தல் என்பது சாதனை ஆதலால், தாம் வாழ்தல் என்பது எளிய ஒன்று. இயற்கையே கூட வாழ்வித்துவிடும். நல்ல சமூக அமைப்பும் அரசும் தோன்றிவிட்டால் தாம் வாழ்தல் என்பது எளிது. வாழ்க்கை, தொண்டினையே குறிக்கோளாக உடையது. இந்தக் குறிக்கோளுடன்தான் ஒப்புரவு நெறியைத் திருக்குறள் அறிமுகப்படுத்துகிறது. திருக்குறள் நெறியில் மக்கள் ஒருவருக்கொருவர் கடமைகளைச் செய்வதற்கு உரியவர்கள். உரிமைகளைப் பெறுவதற்கும் உரியவர்கள். ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக்காகவும் என்னும் பொதுவுடைமை நெறியே திருவள்ளுவரின் வாழும் நெறி.

### வாழ்வும் ஒப்புரவும்

ஒருவர் செய்யும் செயலானது அது தரும் பயனைவிட, செய்பவரின் மனப்பாங்கு, உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது. தரத்தைக் காட்டுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது. உதவி செய்தல் எதற்காக? தற்காப்புக்காகவும் இலாபத்திற்காகவும்கூட உதவி செய்யலாமே! சொல்லப்போனால் இத்தகைய உதவிகள் ஒருவகையில் வாணிகம் போலத்தான். அதே உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைந்து, உதவிசெய்வதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

### ஒப்புரவின் இயல்பு

ஒப்புரவில் பெறுபவர் அந்நியர் அல்லர்; உறவினர். கடமையும் உரிமையும் உடையவர். ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கையில் வள்ளல்கள் இல்லை. வாங்குபவரும் இல்லை. ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கையில் உடைமைச்சார்பு இறுக்கமான தனியுடைமையாக இல்லாமல் அறநெறி சார்ந்த குறிக்கோளுடைய உடைமையாக அமையும். ஒப்புரவில் ஈதல்- ஏற்றல் என்பதன் வழியாக அமையும் புரவலர்- இரவலர் உறவு இல்லை. ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கை உரிமையும் கடமையும் உடைய வாழ்வு முறையாக அமைவதால் கடமைகள் உரிமைகளை வழங்குகின்றன.

### பொருளீட்டலும் ஒப்புரவும்

பொருள் ஈட்டலிலும் அந்தப் பொருளை நுகர்தலிலும் அறிவியல் பாங்கு தேவை. அயலவர் உண்ணாது இருக்கும்போது நாம் மட்டும் உண்பது நெறியும் அன்று; முறையும் அன்று. அதுமட்டுமல்ல. பாதுகாப்பும் அன்று; அயலவன் விழித்து எழுந்தால் நமது நிலை பாதிக்கும். ஆதலால் வாழ்வு அறநிலையப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும். இம்முறையை அப்பரடிகள் எடுத்துக் கூறினார். அண்ணல் காந்தியடிகள் வழிமொழிந்தார். பாவேந்தர் பாரதிதாசனும் உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்றார். செல்வத்துப் பயன் ஒப்புரவு வாழ்க்கை.

பொருளீட்டல் தான்மட்டும் வாழ்வதற்காக என்பது அறிவியல் கருத்து அன்று. பொருளீட்டும் வாழ்க்கையேகூடச் சமூக வாழ்க்கைதான். மற்றவர்களுக்கு வழங்கி, மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டலுக்கு உரிய கரு. இரப்பார்க்கு இல்லென்று இயைவது கரத்தல் அறிவியல் அன்று; அறமும் அன்று. செய்வது செய்து பொருள் ஈட்டி இரப்பார் துன்பத்தை மாற்றுவதே சமூகத்தின் பொது நிலை. பொருள் ஈட்டல், சேர்த்தல், பாதுகாத்தல் மனித வாழ்க்கையில் நடைபெறும் ஒரு பணி - இல்லை - ஒரு போராட்டம். பொருள் தேடுவது ஒரு பெரிய காரியம். அதைவிடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை மருந்து என்றும் கூறுவது தமிழ் மரபு. பொருள் தேடல் வாழ்க்கையின் லட்சியம் அன்று. பொருள் வாழ்க்கையின் கருவியே. நல்ல அறிவும் பண்பும் உடையவர்களுக்குப் பணம் பணியாள். ஆனால், இவை இல்லாதவர்க்கோ மோசமான எசமானன். வாழ்க்கையை உணர்ந்து கொள்ளச் செல்வம் மட்டுமன்றி வறுமையும்கூடத் துணை செய்யும். பொருளும் தேவை; அதைத் துய்க்கத் திறனும் தேவை. பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சி பெறலாம். செல்வத்தைத் தனியே அனுபவித்தல் இழத்தலுக்குச் சமம்.

> செல்வத்துப் பயனே ஈதல்
> துய்ப்பேம் எனினே தப்புந பலவே (புறம் 189; 7-8)

என்கிறது புறநானூறு. — நக்கீரனார்

### ஒப்புரவின் பயன்

ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது. அதைத் தடுப்பார் யாருமில்லை. ஊருணித்தண்ணீர் எடுத்து அனுபவிக்கப்படுவது. பழுத்த பயன்மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம். பயன்மரம் பழங்களைத் தருவது உரிமை எல்லைகளைக் கவனத்தில்

ஆலயங்கள் சமுதாய மையங்கள்
தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது.
குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை - 16 தொகுதிகள்

இவரின் இலக்கியங்கள்
அப்பர் விருந்து, அப்பர் சந்தாம் மாணிக்கவாசகர், திருவாசகத்தேன், தமிழமுது, நமது சிந்தனையில் சமய சமுதாயம், திருவருட் சிந்தனை, திசைநிறைப் பூ நூல்



Scanned with OKEN Scanner

இறுதிக் காலத்தில் திரைமணியால் எங்கே போகிறோம்? கட்டுரை எழுதினார்.

கொண்டல்ல. மருந்துமரம் உதவி செய்தலில் தன்னை மறந்த நிலையிலான பயன்பாட்டு நிலை ஒன்றே காணப்பெறுகிறது. நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம். ஒப்புரவை விளக்கப் பயன்படுத்தியுள்ள இந்த உவமைகள் இன்றும் பயன்படுத்தத் தக்கவையாகவே அமைந்துள்ளன. ஆயினும் ஊருணி, பயன்மரம், மருந்துமரம் ஆகியன மனிதர்கள் தம் படைப்பாற்றலைக் கொண்டு படைத்தவை என்பதை நினைவில் கொள்க!

### ஒப்புரவும் கடமையும்

ஊருணியை அகழ்ந்தவன் மனிதன். அந்த ஊருணியில் தண்ணீரைக் கொணர்ந்து தேக்கியது யார்? மனிதர்தாம். ஊருணியை அமைத்துத் தண்ணீரைத் தேக்கும் கடமை பொறுப்புணர்வுடன் கூட்டுப் பொறுப்புடன் செய்யப் பெற்றால்தான் ஊருணியில் தண்ணீர் நிறையும். பலரும் எடுத்துக் குடிக்கலாம். பயன்தரும் மரங்களை வளர்த்தால்தான் கனிகள் கிடைக்கும். தின்று அனுபவிக்கலாம்.

இங்கும் மனிதனின் படைப்பைத் தொடர்ந்துதான் நுகர்வு வருகிறது; ஒப்புரவு வருகிறது. அதேபோல மருந்து மரங்களையும் நட்டு வளர்த்தால்தான் பயன்படுத்த முடியும். ஆதலால் ஒப்புரவாண்மையுடன் வாழ முதலில் தேவைப்படுவது உழைப்பு; கூட்டு உழைப்பு. பொருள்களைப் படைக்கும் கடமைகள் நிகழாத வரையில் ஒப்புரவு வாழ்வு மலராது. கடமைகள் இயற்றப் பெறாமல் ஒப்புரவு தோன்றாது. ஒரோவழி தோன்றினாலும் நிலைத்து நில்லாது. கடமைகளில், பொருள் செய்தலில் ஒவ்வொருவரும் கூட்டு உழைப்பில் ஈடுபட்டால்தான் ஒப்புரவுநெறி தோன்றும்; வளரும்; நிலைத்து நிற்கும்.

### நிறைவாக

நாம் இன்று வாழ்வது உண்மை. நமக்கு வாய்த்திருக்கும் வாய்ப்புகளும் அருமையானவை. ஏன் காலம் கடத்த வேண்டும்? இன்று நன்று, நாளை நன்று என்று எண்ணிக் காலத்தைப் பாழடிப்பானேன்? இன்றே வாழத் தொடங்குவோம். வாழத் தொடங்கியதன் முதற்படியாகக் குறிக்கோளைத் தெளிவாகச் சிந்தித்து முடிவு செய்வோம். இந்தப் புவியை நடத்தும் பொறுப்பை ஏற்போம். பொதுமையில் இந்தப் புவியை நடத்துவோம். பொதுவில் நடத்துவோம். உலகம் உண்ண உண்போம். உலகம் உடுத்த உடுத்துவோம். எங்கு உலகம் தங்கியிருக்கிறதோ அங்கேயே நாமும் தங்குவோம். மண்ணகத்தில் விண்ணகம் காண்போம்.

ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. – ஒப்புரவறிதல்

உலகினர் விரும்புமாறு உதவி செய்து வாழ்பவரது செல்வமானது ஊருணியில் நிரம்பிய நீர்போலப் பலருக்கும் பயன்படும்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். –ஒப்புரவறிதல்

நற்பண்பு உடையவரிடம் செல்வம் சேர்வது ஊருக்குள் பயன்தரும் மரத்தில் பழங்கள் பழுத்திருப்பதைப் போன்றது.

## கண்ணதாசன்

**புதுசு** — **காலக்கணிதம்**
பத்தாம் வகுப்பு - செய்யுள்

**கண்ணதாசன்**

- 'முத்தையா' என்னும் இயற்பெயரைக் கொண்ட கண்ணதாசன் இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர்.
- இவரது பெற்றோர் சாத்தப்பன் - விசாலாட்சி ஆவர்.
- 1949 ஆம் ஆண்டு **"கலங்காதிரு மனமே"** என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானார்.
- திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர் **கண்ணதாசன்**.
- இவர் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர்.
- தன் திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் **மெய்யியலை மக்களிடையே** கொண்டு சேர்த்தவர்.
- **சேரமான் காதலி** என்னும் புதினத்திற்காக **சாகித்திய அகாதெமி விருது** பெற்றவர்.
- இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டிருந்தார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

கண்ணதாசனின் இயற்பெயர் என்ன? (CCS3T-2023)

அ) **முத்தையா** ஆ) இராமையா
இ) சுப்பையா ஈ) கண்ணய்யா
உ) விடை தெரியவில்லை

'சேரமான் காதலி' எனும் புதினத்திற்காக சாகித்திய அகாடமி விருதுபெற்ற திரைப்படக் கவிஞர் யார்? (EO4GS-2022)

அ) **கண்ணதாசன்** ஆ) மு.மேத்தா
இ) நா.காமராசன் ஈ) நா.முத்துக்குமார்
உ) விடை தெரியவில்லை

### காலக்கணிதம்

**- கண்ணதாசன்**

கவிஞன் என்பவர் யார்? அவன் குணம் என்ன? அவன் பணி என்ன? மனம் என்னும் வயலில், சொல்லேர் உழவனாக, சிந்தனை விதையைத் தூவி, மடமைக் களை பறித்து, தத்துவ நீர் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவன் கவிஞன். காலத்தைக் கணிப்பதால் காலத்தை வென்றவனாகிறான்.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!



இலக்கியங்கள்: திருவள்ளுவர், திருவள்ளுவர் காலக் அரசியல், திருவள்ளுவர் காட்டும் அரசு, குறட்செல்வம், திருக்குறள் பேசுகிறது, குறள் நூறு, சிலம்புநெறி, பாரதியசக்தி, பாரதிதாசனின் உலகம், கவியரங்கில் அடிகளார் மண்ணும் மனிதர்களும் (தன்வரலாறு) கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல்சமுதாயம்,

Scanned with OKEN Scanner

ஆக்கல் அளித்தல் அழித்தலிம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!
செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;
பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!
பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்!
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;
இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
பண்டோர் கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!
புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்!
மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

('காலக்கணிதம்' என்னும் இப்பாடப்பகுதி கண்ணதாசன் கவிதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.)

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

'காலக் கணிதம்'- பாடலில் இடம்பெற்றுள்ள சரியான வரியை தேர்வு செய்க (EO1GS/2022)

அ) பொருளென் செல்வம் பொன்னினும் விலைமிகு!
ஆ) விலைமிகு செல்வம் பொன்னினும் பொருள் என்!
இ) பொன்னினும் விலைமிகு பொருள் என் பொருள்!
**ஈ) பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!**

### கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்

நதியின் பிழையன்று
நறும்புனலின்மை அன்றே
பதியின் பிழையன்று
பயந்த நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை நீ
இதற்கென்னை வெகுண்டதென்றான்
- கம்பன்

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் இன்றி
வேறு - யாரம்மா?



**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"நதிவெள்ளம் காய்ந்து விட்டால் நதி செய்த குற்றமில்லை" என்ற திரை இசைப்பாடலை இயற்றியவர் (GTGS-2022)

அ) மருதகாசி
ஆ) உடுமலை நாராயணகவி
**இ) கண்ணதாசன்**
ஈ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
உ) விடை தெரியவில்லை

## பழகு கண்ணதாசன் கவியின்பம்

ஒன்பதாம் வகுப்பு - துணைப்பாடம்

**கண்ணதாசன் - படைப்புகளும் சிறப்புகளும்**

- முத்தையா என்ற இயற்பெயர் கொண்ட கண்ணதாசன் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 24.06.1927 அன்று பிறந்தார்.
- பெற்றோர் **சாத்தப்பன் - விசாலாட்சி** ஆவர்.
- கண்ணதாசன் கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவர்தம் திரைப்படப்பாடல்கள் நூல்வடிவம் பெற்றுள்ளன.
- **ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், இயேசுகாவியம்** முதலியன அவர் படைத்த நெடுங்கவிதை நூல்கள்.
- **இராசதண்டனை** என்பது, **கம்பர் - அம்பிகாபதி** வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு, அவர் படைத்த இனிய நாடகம்.
- **ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி, வேலங்குடித் திருவிழா** முதலிய பல புதினங்களையும் கண்ணதாசன் படைத்திருக்கிறார்.
- அவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட புதினங்களில் **சேரமான் காதலி** சிறந்த வரலாற்றுப் புதினமாகும். அதற்குச் சாகித்திய அகாதமியின் பரிசு கிடைத்துள்ளது.
- கண்ணதாசன் தென்றல், முல்லை, **கண்ணதாசன், தமிழ் மலர்** முதலிய இதழ்கள் தொடங்கி, அவற்றுக்கு ஆசிரியராக இருந்து சிறந்த இதழ்ப்பணி ஆற்றியுள்ளார்.
- கவிதையிலும் உரைநடையிலும் சொற்பொழிவிலும் திரைப்படத் துறையிலும் தமக்கென ஒரு புதிய வழியினை வகுத்துக்கொண்டு தலைநிமிர்ந்து நின்றவர் கண்ணதாசன். அவர், தம் கவிதைகளால் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

> நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
> எந்தநிலையிலும் எனக்கு மரணமில்லை.
> - கண்ணதாசன்

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

கண்ணதாசன் படைத்த நாடகம் (CCSFT-2018)

அ) மாங்கனி
ஆ) ஆட்டனத்தி ஆதிமந்தி
இ) கல்லக்குடி மகாகாவியம்
**ஈ) இராசதண்டனை**

கண்ணதாசனின் படைப்புகளில் 'சாகித்ய அகாடமி' பரிசு பெற்ற புதினம் எது? (GR5AT-2017)

அ) வேலங்குடித் திருவிழா
ஆ) ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி
**இ) சேரமான் காதலி**
ஈ) இராச தண்டனை

சாகித்திய அகாதமி பரிசு பெற்ற கண்ணதாசன் புதினம் (JGST-2017)

அ) ஆட்டனத்தி ஆதிமந்தி    ஆ) மாங்கனி
**இ) சேரமான் காதலி**    ஈ) அங்கயற்கண்ணி

நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை
- எனக் கவிதை பாடியவர் (GR2AT-17)

அ) சுரதா    **ஆ) கண்ணதாசன்**
இ) பாரதிதாசன்    ஈ) மு.மேத்தா

கண்ணதாசன் பணியாற்றாத இதழ் பெயர் (JGST-2017)

அ) தென்றல்    ஆ) முல்லை
**இ) குயில்**    ஈ) தமிழ் மலர்

கண்ணதாசன் எழுதிய புதின நூல்களுள் 'சாகித்திய அகாதெமி' பரிசு பெற்ற நூல் (HC2GST16)

அ) ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி
ஆ) வேலங்குடித்திருவிழா
இ) சிவப்புக்கல் மூக்குத்தி
**ஈ) சேரமான் காதலி**

கண்ணதாசன் படைத்த இனிய நாடகம் (GRFT3 - 2016)

அ) மாங்கனி    ஆ) ஆயிரம் தீவு
இ) அங்கயற்கண்ணி    **ஈ) இராச தண்டனை**

'இராசதண்டனை' - இந்த நாடகத்தை யார் படைத்தார்? (GTPA-13 2014)

அ) வண்ணதாசன்    ஆ) பாரதிதாசன்
**இ) கண்ணதாசன்**    ஈ) வாணிதாசன்

### கண்ணதாசன் கவியின்பம்

உலகுக்கு உயிர்ப்பாற்றலை வழங்கும் ஞாயிறு ஒருபோதும் மறைவதில்லை. அதைப் போன்றே இலக்கிய வளம்கொழிக்கும் மொழிகளிலும், உயிர்த்துடிப்புள்ள கவிஞர்கள் இடையறாது தோன்றுகிறார்கள். அவர்கள், அம்மொழிகளின் விழிகளுக்கு ஒளியூட்டி வருகிறார்கள். கவிஞர்களும் அவர்கள் வாழும் காலச் சூழலுக்கேற்பத் தத்தம் கவிதைகளைப் படைத்துக் காலத்தைவென்று நிலைத்து நிற்கின்றார்கள். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் தனக்கென்று தனி முத்திரையைப் பதித்தவர் கவியரசு கண்ணதாசன். எளிய சொற்களைக் கொண்டு உள்ளத்தை மகிழ்விக்கும் பாடல்களை இயற்றிய பெருமை கண்ணதாசனுக்கு உண்டு.

#### தமிழுணர்வு

செந்தமிழ்ச் சொல்லெடுத்து
இசை தொடுப்பேன் - வண்ணச்
சந்தத்திலே கவிதைச் சரம்தொடுப்பேன்

எனத் தமிழ்க்கவிதை எழுதத் தொடங்கித் தமிழ்த்தாயின்மீது கொண்ட பற்றினால்,

கதிர்வெடித்துப் பிழம்புவிழக்
கடல்கொதித்துச் சூடேற்ற
முதுமைமிகு நிலப்பரப்பில்
முதற்பரப்பு தோன்றிவிட
நதிவருமுன் மணல்வருமுன்
நலம்வளர்த்த தமிழணங்கே!

என நெக்குருகித் தமிழ்த்தாயின் பழைமையைப் பறைசாற்றுகிறார்.

#### வாழ்வியல் சிந்தனை

வாழ்க்கையும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளுமே கவிதைக்குரிய பொருள்களாம். இன்பமும் துன்பமும் நிறைந்தவைதாம் வாழ்க்கை; இரண்டனையும் ஏற்கும் மனவுறுதி பெறுவதே அமைதியான வாழ்வுக்கு வழி.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென் றாலும்
வாடி நின்றால் ஓடுவ தில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்.

இப்பாடலிலுள்ள நம்பிக்கை நமக்கு உரம், அறிவுக்கு வழித்தடம் என்று அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.

#### பசுமைமாறா நினைவு

பள்ளி, கல்லூரிக் கல்வியை முடித்துச் செல்லும் காலத்தில், மாணவர்களுக்காக நடத்தப்பெறும் விடைபெறு விழாவில் கலந்துகொள்வோர் அனைவரையும் நெகிழவைக்கும் பாடலைக் கண்ணதாசன் இயற்றியுள்ளார்.

பசுமை நிறைந்த நினைவுகளே!
பாடித் திரிந்த பறவைகளே!
பழகிக் களித்த தோழர்களே!
பறந்து செல்கின்றோம் - நாம் பறந்து
செல்கின்றோம்
எந்த ஊரில் எந்த நாட்டில் என்று காண்போமோ?

#### குழந்தை

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி மழலை மொழிபேசும் குழந்தையே ஒரு கவிதை. அக்குழந்தையை உவமிக்கும் கண்ணதாசனின் அழகான பாடலைப் பாடி மகிழலாம்.

முத்தான முத்தல்லவோ மிதந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள்தந்த பொருளல்லவோ



Scanned with OKEN Scanner

சின்னஞ்சிறு சிறகுகொண்ட சிங்காரச் சிட்டல்லவோ
செம்மாதுளை பிளந்து சிரித்துவரும் சிரிப்பல்லவோ
மாவடு கண்ணல்லவோ மைனாவின் மொழியல்லவோ

### பொதுவுடைமை

சுரண்டல், வறுமை ஆகியன நீங்கவும், சமத்துவம் ஓங்கவும் பொதுமை உணர்வே ஏற்றது என்பதனைக் கண்ணதாசன் வலியுறுத்தியுள்ளார்.

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்
வல்லான் பொருள்குவிக்கும் தனியுடைமை
நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை.

கவிதைகளில் சொல்லப்படும் கருத்துகளைக் காட்டிலும், அக்கருத்துகளை வெளிப்படுத்த கவிஞன் கையாளும் முறைகளும் இன்றியமையாதன. கவிதை நடை என்பது, கவிதையின் பொருளிலும் அதனை வெளிப்படுத்தும் மொழியிலும் அமைந்துள்ளது.

### ஓசைநயம்

உழவர் பெருமக்களின் இல்லத்தே எழுகின்ற பல்வேறு ஓசைகள் இயைபுத்தொடையும் இசைநயமும் ஒத்து ஒலிக்கின்றன.

காளை மணியோசை; களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை; வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை; தாயர்தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை; குழவியர்வாய்த் தேனோசை.

ஓசை என்னும் சொல்லைப் பலமுறை பயன்படுத்திப் பொருள்நயமும் ஓசை இனிமையும் பொருந்துமாறு கவிஞர் பாடியுள்ளார்.

### சொல்லாட்சி

கவிதைக்கு மூலப்பொருள் சொற்கள் இனிய தமிழ்ச்சொற்களாகிய மணிகள், கவிஞர்களால் கையாளப்படும்பொழுது அவை பட்டை தீட்டப்பெற்று ஒளிவீசுகின்றன. இத்தகைய சொல்லாட்சிகளைக் கண்ணதாசனின் கவிதைகளில் காணலாம்.

உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும் - நிலை
உயரும்போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்.
...

### கண்ணதாசன் வாழ்க்கை

சிறுகூடல்பட்டியில் உள்ள ஏட்டுப்பள்ளிக்கூடத்தில் தனது நான்காம் வயதில் தொடக்கக்கல்வியைத் தொடங்கினார். பின்னர் ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஒன்றில் ஏழாம் வகுப்புவரை படித்தார். பிறகு, அமராவதிப் புதூர் குருகுலத்தில் உள்ள ஓர் உண்டி உறைவிடப்பள்ளியில், ஏழாம் வகுப்புவரை படித்த அவர், ஐந்தாம் வகுப்பில் சேர்க்கப்பட்டார்.

பத்து, பன்னிரண்டு வயதில் நாவல் படிப்பதில் ஆசை கொண்டிருந்த அவர், சரத்பாபுவின் கதைகளையும் பங்கிம்பாபுவின் கதைகளையும் விரும்பிப் படித்தார். தனது பன்னிரண்டாம் வயதில் தனக்குள் எழுதும் ஆற்றல் இருப்பதனை உணர்ந்தார்.

"விண்ணா கானம் விடியுமுன் கேட்டது
கர்ணா மிர்தம் காதுக்கு இனிமை
தூக்கம் கலைந்தது துள்ளி எழுந்தேன்
படுக்கையில் இருந்தே பருகினேன் அமுதம்"

## புதுசு

## மலைப்பொழிவு

ஏழாம் வகுப்பு - செய்யுள்

### கண்ணதாசன்

- கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா.
- இவர் கவியரசு என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகிறார்.
- காவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் போன்ற இலக்கிய வடிவங்களில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.
- ஏராளமான திரைப்படப் பாடல்களையும் எழுதியுள்ளார்.
- இவர் தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார்.

### இயேசு காவியம்
### - கண்ணதாசன்

உலக மக்கள் சாதி, மதம், மொழி முதலியவற்றால் பிரிந்துள்ளனர். இப்பிரிவினைகள் காரணமாக மக்களிடையே முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்படுகின்றன. எல்லாரிடமும் அன்பு காட்டி அமைதியையே வாழ்வியல் நெறியாகக் கொண்டு வாழ்ந்தால் உலகம் உயர்வடையும். இவ்வுண்மைகளை இயேசு காவியம் வழி அறியலாம்.

இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது அறிவுரைகளையும் கூறும் நூல் இயேசுகாவியம் ஆகும். இந்நூலில் உள்ள மலைப்பொழிவு என்னும் பகுதியிலிருந்து சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

சாந்தம் உடையோர் பேறுபெற்றோர் எனத்
தத்துவமும் சொன்னார் - இந்தத்
தாரணி முழுவதும் அவர்களுக்கு உரியது
தலைவர்கள் அவர்என்றார்!

மாந்தரின் வாழ்வில் தேவைப் படுவது
சாந்தம் தான்என்றார் - அது
மண்ணையும் ஆளும் விண்ணையும் ஆளும்
மகத்துவம் பார்என்றார்!

சாதிகளாலும் பேதங்களாலும்
தள்ளாடும் உலகம் - அது
தர்மம் ஒன்றை நம்பிய பிறகே
அடங்கிவிடும் கலகம்!

ஓதும் பொருளாதாரம் தனிலும்
உன்னத அறம்வேண்டும் - புவி
உயர்வும் தாழ்வும் இல்லா தான

வாழ்வினைப் பெறவேண்டும்.

இரக்கம் உடையோர் பேறுபெற்றோர் என
இயேசுபிரான் சொன்னார் - அவர்
இரக்கம் காட்டி இரக்கத்தைப் பெறுவர்
இதுதான் பரிசுஎன்றார்

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் - அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்!

தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு - தினம்
தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்
பேசும் பொய்யுறவு!

இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை விண்கனவு - தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு!

**பாடலின் பொருள்**

(தம் சீடர்களுக்கு அறிவுரை கூற எண்ணிய இயேசுநாதர் ஒரு குன்றின் மீது ஏறி நின்று பேசத் தொடங்கினார்.)

சாந்தம் என்னும் அமைதியான பண்பு கொண்டவர்கள் பேறு பெற்றவர்கள். இந்த உலகம் முழுவதும் அவர்களுக்கே உரியது. அவர்களே தலைவர்கள் ஆவர் என்ற உண்மையை இயேசுநாதர் கூறினார். மனித வாழ்க்கையில் தேவைப்படுவது பொறுமை. அது மண்ணையும் விண்ணையும் ஆட்சி செய்யும் பெருமையுடையது என்றார்.

இவ்வுலகம் சாதிகளாலும் கருத்து வேறுபாடுகளாலும் நிலைதடுமாறுகிறது. அறம் என்கிற ஒன்றனை நம்பியபிறகு சண்டைகள் நீங்கி உலகம் அமைதியாகி விடும். பொருள் ஈட்டுவதிலும் அறவழியைப் பின்பற்ற வேண்டும். இவ்வுலகம் ஏற்றத்தாழ்வு இல்லா வாழ்வைப் பெற வேண்டும்.

இரக்கம் உடையோரே பேறுபெற்றவர் ஆவர். அவர்கள் பிற உயிர்களின் மீது இரக்கம் காட்டி இறைவனின் இரக்கத்தைப் பெறுவர். இதுதான் அவர்களுக்கான பரிசு. மனிதன் ஆசையில் விழுந்துவிட்டால் அவனது வாழ்வு பாலைவனம்போல் பயனற்றதாகிவிடும். அவன் நல்ல உள்ளத்தோடு வாழ்ந்தால் அவன் வாழ்க்கை மலர்ச்சோலையாக மாறிவிடும்.

மனிதர்கள் சண்டை சச்சரவுகளால் தாமும் துன்புற்றுப் பிறரையும் துன்புறுத்துகின்றனர். மேலும் அவர்கள் தன்னாடு என்றும், பிறர்நாடு என்றும் பேசி உண்மையில்லா உறவுகளாக வாழ்கின்றனர்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நடக்கும் ஆயிரம் போட்டிகளால் பயனற்ற கனவுகள்தாம் தோன்றுகின்றன. இவை இல்லாமல் அமைதியாக வாழ்ந்தால் இதயம் மலையளவு உயர்ந்ததாக மாறும்.

...

சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927 ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார். இவரின் இயற்பெயர் முத்தையா. இவருக்குக் காரைமுத்துப்புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கிய நாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் பல உண்டு. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார். இவர் 1981 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். 70

**காயிதே மில்லத்**

## புதுசு — கண்ணியமிகு தலைவர்

ஏழாம் வகுப்பு - உரைநடை

காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்து அதில் இளைஞர்கள் திரளாகக் கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அப்போது திருச்சி தூயவளனார் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த காயிதேமில்லத் தமது கல்வியை விட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.

**எளிமையின் சிகரம்**

காயிதேமில்லத் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குத் தனி மகிழுந்தில் செல்லமாட்டார். தொடர்வண்டி, பேருந்து போன்ற பொதுப்போக்குவரத்து ஊர்திகளையே பயன்படுத்துவார். அன்பர் ஒருவர் அவருக்கு ஒரு மகிழுந்தைப் பரிசளித்தார். ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து எப்போதும்போல் தொடர்வண்டியிலேயே பயணம் செய்தார். அவர் சார்ந்திருந்த இயக்கத்தின் சார்பாக அவருக்கு ஒரு மகிழுந்தும் பெருந்தொகையும் பரிசளிக்கப்பட்டன. அவற்றையும் தாம் தொடங்கி வைத்த கல்லூரியின் பயன்பாட்டிற்கு அளித்துவிட்டார்.

**ஆடம்பரம் அற்ற திருமணம்**

அவரது குடும்ப நிகழ்வுகளிலும் எளிமையைக் காணமுடிந்தது. எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் மிக எளிமையாகத் தம் மகனின் திருமணத்தை நடத்தி முடித்தார். பெண் வீட்டாரிடம் மணக்கொடை பெறுவது பெருகியிருந்த அக்காலத்தில் மணக்கொடை பெறாமல் அத்திருமணத்தை நடத்தினார். மேலும் "மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன்" என்று வெளிப்படையாக அறிவித்தார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன்' என மணக்கொடை முறைக்கு எதிர்ப்பு தெரிவித்தவர் (GTGS-2022)

அ) காயிதே மில்லத்
ஆ) தந்தை பெரியார்
இ) முத்துராமலிங்கர்
ஈ) காமராசர்

### நேர்மை

காயிதே மில்லத், ஒருமுறை தமது இயக்க அலுவலகத்தில் இருந்த போது அங்கிருந்த பணியாளரை அழைத்தார். அவரிடம் ஓர் உறையையும் பணத்தையும் கொடுத்து, "அஞ்சல்தலை வாங்கி இந்த உறையில் ஒட்டி அஞ்சலில் சேர்த்து விடுங்கள்" என்று கூறினார். அந்தப் பணியாளர் "ஐயா நம் அலுவலகத்திலேயே அஞ்சல்தலைகள் வாங்கி வைத்துள்ளோம், அவற்றிலிருந்து ஒன்றை எடுத்து ஒட்டி விடுகிறேன்" என்றார். அதற்கு அந்தத் தலைவர், "வேண்டாம். இது நான் தனிப்பட்ட முறையில் அனுப்பும் கடிதம். அதற்கு இயக்கப் பணத்தில் இருந்து வாங்கப்பட்ட அஞ்சல்தலைகளைப் பயன்படுத்துவது முறையாகாது" என்று கூறினார்.

### மொழிக்கொள்கை

இந்தியா விடுதலை பெற்ற பிறகு நாட்டின் ஆட்சிமொழியைத் தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. மிகுதியான மக்கள் பேசும் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்றனர் சிலர்; பழமை வாய்ந்த மொழியை ஆட்சிமொழியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தனர் வேறு சிலர். ஆனால் காயிதேமில்லத், "பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழிதான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். இன்னமும் விரிவாகச் சொல்ல வேண்டும் என்றால் திராவிட மொழிகள்தாம் இந்த மண்ணிலே முதன்முதலாகப் பேசப்பட்ட மொழிகள். அவற்றுள் மிகவும் இலக்கியச் செறிவுகொண்ட தமிழ்மொழி தான் மிகப் பழமையான மொழி. எனவே, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

### நாட்டுப்பற்று

காயிதேமில்லத் உள்ளத்தில் எப்போதும் நாட்டுப்பற்று மேலோங்கி இருந்தது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு போர் மூண்டது. அப்போது தனது ஒரே மகனைப் போர்முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்து அந்தத் தலைவர் அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினார்.

### காயிதே மில்லத்

அவரது இயற்பெயர் முகம்மது இசுமாயில். ஆனால் மக்கள் அவரை அன்போடு காயிதே மில்லத் என்று அழைத்தனர். 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள். அப்பெயருக்கேற்ப மக்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்தார் அவர்.

### அரசியல் பொறுப்புகள்

காயிதே மில்லத் 1946 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காகத் தொண்டு செய்தார்.

- தமிழக அரசியல் வானில் கல்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார். - அறிஞர் அண்ணா
- இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர் - தந்தை பெரியார்

### கல்விப்பணி

கல்வி ஒன்றுதான் ஒட்டுமொத்தச் சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று எண்ணினார் காயிதே மில்லத். "கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை" என்ற முதுமொழிக்கு ஏற்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்க நினைத்தார். திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரி, கேரளாவில் ஃபரூக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்க அவரே காரணமாக இருந்தார்.

### தொழில்துறை

அவர் மிகச் சிறந்த தொழில்துறை அறிவுபெற்றிருந்தார். இந்திய நாட்டின் கனிம வளங்களைப் பற்றிப் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார். இதனால் இந்திய அரசு கனிம வளங்களைப் பயன்படுத்தும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதன் மூலம் தொழில்துறை வளர்ச்சி அடைந்தது. மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெற்றனர்.

தலைவர்கள் பலராலும் பாராட்டப்பட்ட பண்பாளர் அவர். எல்லாரிடமும் வேறுபாடு இல்லாமல் எளிமையாகப் பழகும் தன்மை கொண்டவராக விளங்கினார். தம் வாழ்நாள் முழுவதும் சமய நல்லிணக்கத்தைப் பேணிவந்தார். இத்தகைய சிறப்பு மிக்க தலைவர்களின் பெருமைகளை அறிந்து போற்றுவது நமது கடமையாகும்.

## தாராபாரதி

புதுசு

**பாரதம் அன்றைய நாற்றங்கால்**

ஆறாம் வகுப்பு - கவிதைப்பேழை

### தாராபாரதி

- தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன்
- கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர்.
- புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும்.

### பாரதம் அன்றைய நாற்றங்கால்

நமது நாடு வளம் பொருந்தியது. இங்கு இயற்கை வளங்கள் மட்டுமன்றி இலக்கிய வளங்களும் மிகுந்துள்ளன. வேற்றுமையில் ஒற்றுமையைக் கொண்டது நமதுநாடு. இமயம் முதல் குமரி வரை

வாழும் இந்தியர்கள் அனைவரும் உணவு, உடை, மொழி, நாகரிகம் ஆகியவற்றால் வேறுபட்டு இருந்தாலும் உணர்வால் ஒன்றுபட்டவர்களே. தேசிய ஒருமைப்பாட்டைப் போற்றும் பாடலை அறிவோம் வாருங்கள்.

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

தெய்வ வள்ளுவன் நெய்த குறள்தான்
தேசம் உடுத்திய நூலாடை!
மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு
மெய்யுணர்வு என்கிற மேலாடை! (புதுமைகள்)

காளி தாசனின் தேனிசைப் பாடல்கள்
காவிரிக் கரையில் எதிரொலிக்க
கம்பனின் அமுதக் கவிதை களுக்குக்
கங்கை அலைகள் இசையமைக்க (புதுமைகள்)

கன்னிக் குமரியின் கூந்த லுக்காகக்
காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!
மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்
கிழக்குக் கரையின் நலம்கேட்கும்! (புதுமைகள்)

புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம்!
கல்லைக் கூட காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்! (புதுமைகள்)

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள் பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

**பாடலின் பொருள்**

பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்தியநாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குகின்றது. உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன.

குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன.

அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரத நாடு திகழ்கின்றது. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்றுகோலாக காந்தியடிகளின் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகின்றது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் தாராபாரதி குறிப்பிடும் நூல் (CCS3T-2023)

அ) திருவாசகம்
ஆ) திருக்குறள்
இ) திரிகடுகம்
ஈ) திருப்பாவை
உ) விடை தெரியவில்லை

பழசு

## திண்ணையை இடித்துத் தெருவாக்கு!

ஆறாம் வகுப்பு - கவிதைப்பேழை

### கவிஞர் தாராபாரதி

கவிஞர் தாராபாரதி எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுவதில் வல்லவர். ஆசிரியராகப் பணியாற்றிய இவர், தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, தாராபாரதி கவிதைகள் முதலியன இவர்தம் நூல்களுள் சில. இவர் வாழ்ந்த காலம் 26.02.1947 முதல் 13.05.2000 வரை.

உட்கார் நண்பா, நலந்தானா? - நீ
ஒதுங்கி வாழ்வது சரிதானா?
சுட்டு விரல்நீ சுருங்குவதா? - உன்
சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா?

'புல்லாய்ப் பிறந்தேன் நானென்று' - நீ
புலம்ப வேண்டாம்; நெல்கூட
புல்லின் இனத்தைச் சேர்ந்ததுதான் - அது
பூமியின் பசியைப் போக்கவில்லை?

'கடலில் நான்ஒரு துளி' யென்று - நீ
கரைந்து போவதில் பயனென்ன?
'கடலில் நான்ஒரு முத்தென்று' நீ
காட்டு; உந்தன் தலைதூக்கு!

வந்தது யாருக்கும் தெரியாது - நீ
வாழ்ந்ததை உலகம் அறியாது;
சந்ததி கூட மறந்துவிடும் - உன்
சரித்திரம் யாருக்கு நினைவுவரும்?

திண்ணை தானா உன்தேசம்? - உன்
தெருவொன் றேயா உன்னுலகம்,
திண்ணையை இடித்துத் தெருவாக்கு - உன்
தெருவை மேலும் விரிவாக்கு!

எத்தனை உயரம் இமயமலை! - அதில்
இன்னொரு சிகரம் உனதுதலை!
எத்தனை ஞானியர் பிறந்த தரை - நீ
இவர்களை விஞ்சிய என்னதடை?

பூமிப் பந்து என்னவிலை? - உன்
புகழைத் தந்து வாங்கும்விலை!

நாமிப் பொழுதே புறப்படுவோம் - வா
நல்லதை எண்ணிச் செயல்படுவோம்!
- தாராபாரதி

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"வந்தது யாருக்கும் தெரியாது - நீ வாழ்ந்ததை உலகம் அறியாது" இவ்வடிகள் இடம் பெறும் பாடலைப் பாடியவர் (SGHGT-2017)

அ) கபிலன் ஆ) முத்துக்குமார்
இ) தாராபாரதி ஈ) இளைய கம்பன்

## வேலுநாச்சியார்

புதுசு

### வேலுநாச்சியார்
ஆறாம் வகுப்பு - துணைப்பாடம்

- இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார்.
- தாய்மொழியாகிய தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றார்.
- சிலம்பம், குதிரையேற்றம், வாட்போர், விற்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக் கொண்டார்.
- சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து வாழ்ந்து வந்தார்.
- காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்து வடுகநாதர் ஆங்கிலேயரால் கொல்லப்பட்டார்.
- வேலுநாச்சியார், ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார்.
- திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.
- வேலுநாச்சியாரின் அமைச்சர் தாண்டவராயன், தளபதிகள் பெரிய மருது, சின்ன மருது.
- வேலுநாச்சியார் - ஐதர் அலி சந்திப்பில் வேலுநாச்சியார் உருது மொழியில் பேசினார்.
- வேலுநாச்சியாரின் ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.
- காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.
- சிவகங்கைக் கோட்டைக் கதவுகள் விஜயதசமித் திருநாள் அன்று திறக்கப்படும்.
- வேலுநாச்சியாரை காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தி கொன்றனர்.
- வேலுநாச்சியாரின் காலம் 1730 - 1796
- வேலு நாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு 1780
- ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர் வேலு நாச்சியார்.
- வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்க உயிர் தியாகம் செய்தவள் குயிலி.
- வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர் அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

பழசு

### இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு
எட்டாம் வகுப்பு - உரைநடை

வேலுநாச்சியார், வீரமும் நுட்பமான அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர். அவரே ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி.

இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி - சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி.1730 ஆம் ஆண்டு ஒரே பெண் மகவாகத் தோன்றியவர் வேலுநாச்சியார். பெற்றோரால் ஆண் வாரிசைப்போன்றே வளர்க்கப்பட்டு, ஆயுதப்பயிற்சி முதல் அனைத்தையும் கற்றுத்தேர்ந்தார். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் வேலுநாச்சியாரை மணந்துகொண்டார்.

ஆங்கிலேயர் 1772 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின்மீது படையெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்போரில், மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணமடைந்தார். வேலு நாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார்.

அவருக்கு உதவ விரும்பிய ஐதர் அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார். மருது சகோதரர்களுடன் வீரப்படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று 1780 ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்த வேலுநாச்சியார் பிறந்த ஆண்டு எது? (CCS4T-2022)

அ) கி.பி.1730 ஆ) கி.பி.1880
இ) கி.பி.1865 ஈ) கி.பி.1800
உ) விடை தெரியவில்லை

ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி (EO4GS-2022)

அ) ராணி மங்கம்மாள்
ஆ) அஞ்சலை அம்மாள்
இ) வேலு நாச்சியார்
ஈ) மூவலூர் இராமாமிர்தம்

உ) விடை தெரியவில்லை

ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி (EOGT-2013)

அ) இராணி மங்கம்மாள்
ஆ) வேலு நாச்சியார்
இ) இராணி பத்மினி
ஈ) இராணி லட்சுமிபாய்

பொருத்தமான தொடரை தேர்வு செய்க. (GR5AT-2017)
வேலுநாச்சியார் என்பவர்

அ) சொக்கநாத நாயக்கரின் மனைவி
**ஆ) ஆங்கிலேயரை எதிர்த்த முதல் தமிழகப் பெண்**
இ) தென்னாட்டின் ஜான்சி இராணி
ஈ) 'தமது பதினாறாம் வயதில் மரணமடைந்தார்

## பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

புதுசு

## துன்பம் வெல்லும் கல்வி

ஆறாம் வகுப்பு - செய்யுள்

### பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

- எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர் **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**.
- திரையிசைப் பாடல்களில் **உழைப்பாளிகளின்** உயர்வைப் போற்றியவர்.
- **மக்கள் கவிஞர்** என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்.

### துன்பம் வெல்லும் கல்வி
### - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

"கல்வி அழகே அழகு" என்பர் பெரியோர். கற்றபடி நிற்பதே அந்த அழகைப் பெறுவதற்கான வழி. கல்வி, அறிவை வளர்ப்பதோடு பண்படுத்தவும் செய்யும். எவ்வளவுதான் கற்றிருந்தாலும் பண்பாடு இல்லாவிட்டால் அந்தக் கல்வி பயனற்றுப் போகும். பண்பட்ட மனிதரின் புகழே பல்லாண்டு நிலைத்திருக்கும்.

ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே - நீ
ஏன்படித்தோம் என்பதையும் மறந்து விடாதே
நாட்டின் நெறிதவறி நடந்து விடாதே - நம்
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே

மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக் கூடாது - பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக் கூடாது
மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது - தன்
மானமில்லாக் கோழையுடன் சேரக் கூடாது

துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும் - நீ
சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்
வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேணும் - அறிவு
வளர்ச்சியிலே வான்முகட்டைத் தொட்டிட வேணும்

வெற்றிமேல் வெற்றிவர விருதுவர பெருமைவர
மேதைகள் சொன்னதுபோல் விளங்கிட வேண்டும்
பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்
வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும்

### பாடலின் பொருள்

நாம் நூல்களைக் கற்றதோடு இருந்து விடக் கூடாது. கற்றதன் பயனை மறக்கக் கூடாது. நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது. நல்லவர்கள் குறைசொல்லும்படி வளரக் கூடாது.

பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக் கூடாது. பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்புநெறி மாறக் கூடாது. பிறர் உழைப்பை நம்பி வாழக் கூடாது.

தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது. துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும். சோம்பலைப் போக்கிட வேண்டும். பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை விட்டுவிட வேண்டும். வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும். அதன்மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெறவேண்டும். பெற்ற தாயின் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழவேண்டும்.

பழசு

## செய்யும் தொழிலே தெய்வம்

ஆறாம் வகுப்பு - செய்யுள்

### பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

- **'மக்கள் கவிஞர்'** என அழைக்கப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கவிதைகளை இயற்றியவர்; திரையிசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.
- உழைக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடைமைச் சிந்தனைகளையும் தம்முடைய பாடல்கள்வழிப் பரவலாக்கினார்.
- பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் ஊரில் பிறந்தவர்.
- இவர் வாழ்ந்த காலம் 13.04.1930 முதல் 08.10.1959 வரை.

### செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி (செய்யும்...)

பயிரை வளர்த்தால் பலனாகும் - அது

உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குல மானமுண்டு
வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம் (செய்யும்...)

காயும் ஒருநாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்
வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம்.
- பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்.

பழசு

## கல்யாணசுந்தரம்
ஒன்பதாம் வகுப்பு

### பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

'மக்கள் கவிஞர்' எனப் போற்றப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், தனது பதினான்கு வயதில் முதற்கவிதையை இயற்றினார். அக்கவிதை பின்வருமாறு :

ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே - கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே
தூண்டில் காரன் வரும் நேரமாச்சு - ரொம்பத்
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே.

பாவேந்தர் பாரதிதாசனிடம் முறையாகப் பாடம் கேட்ட இவர், பாடல் இயற்றும் ஆற்றலைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டார். 1954 ஆம் ஆண்டில் 'படித்த பெண்கள்' என்னும் திரைப்படத்துக்கு முதன்முறையாகப் பாடல் எழுதினார்.

இவர் பாடிய,
"தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது"

என்னும் பாடல் வரிகளைக் கேட்ட தோழர் ஜீவானந்தம், "நீ மீண்டும் தோன்றிய பாரதியடா" எனக் கல்யாணசுந்தரத்தைப் பாராட்டினார்.

**சிறந்த தொடர்**

உச்சிமலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியில் கலக்குது
ஒற்றுமை யில்லா மனிதகுலம்
உயர்வு தாழ்வு வளர்க்குது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியில் கலக்குது
ஒற்றுமை யில்லா மனிதகுலம்
உயர்வு தாழ்வு வளர்க்குது" - என்று பாடியவர் (JGT-19)
அ) கண்ணதாசன்
ஆ) அ.மருதகாசி
இ) உடுமலை நாராயண கவி
ஈ) பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்

"நீ மீண்டும் தோன்றிய பாரதியடா" என்று கல்யாண சுந்தரத்தைப் பாராட்டியவர் (EO4GT-2017)
அ) மருதகாசி
ஆ) சுரதா
இ) உடுமலை நாராயண கவி
ஈ) தோழர் ஜீவானந்தம்

### முடியரசன்

புதுசு

## நானிலம் படைத்தவன்
ஆறாம் வகுப்பு - செய்யுள்

**முடியரசன்**

- முடியரசனின் இயற்பெயர் துரைராசு.
- இவர் பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.
- திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப்பெற்றவர்.

**நானிலம் படைத்தவன்**
**- முடியரசன்**

காடுகளில் வாழ்ந்த மனிதன் அக்காடுகளைத் திருத்தி விளைநிலங்களை உருவாக்கினான். பயிர்களை விளைவித்தான். ஊர்களை உருவாக்கிக் கூடி வாழ்ந்தான். பல்வகைத் தொழில்கள் மூலம் தன் வாழ்வை மேம்படுத்திக் கொண்டான். தொழிலும் வணிகமும் அவன் வாழ்க்கையை உயர்த்தின. தமிழரின் வணிக மேன்மையை அறிவோம் வாருங்கள்.

கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன்பெற்றான்,
மாநிலத்தில் முல்லை மருதம் குறிஞ்சி நெய்தல்
நானிலத்தைக் கண்டபெரும் நாகரிக மாந்தன்அவன்,
ஆழக் கடல்கடந்தான் அஞ்சும் சமர்கடந்தான்
சூழும் பனிமலையைச் சுற்றிக் கொடிபொறித்தான்
முக்குளித்தான் ஆழிக்குள் முத்தெடுத்தான் தோணிக்குள்
எக்களிப்பு மீதூர ஏலம் மிளகுமுதற்,
பண்டங்கள் ஏற்றிப் பயன்நல்கும் வாணிகத்தால்
கண்டங்கள் சுற்றிக் கலமேறி வந்தவன்தான்,
அஞ்சாமை மிக்கவன்தான் ஆனாலும் சான்றோர்கள்
அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்

(இப்பாடல் புதியதொரு விதி செய்வோம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.)

### பாடலின் பொருள்

தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான். தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான். ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான். முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்திய நாகரிக மனிதன் அவன்.

பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான். அச்சம் தரும் போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான். பனிசூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான். ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தான். ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தான். கப்பலில் உலகை வலம் வந்தான். அவன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுபவன்.

**பழசு**

## யார் கவிஞன்?

எட்டாம் வகுப்பு - செய்யுள்

### முடியரசன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்பராயலு - சீதாலட்சுமி |
| ஊர் | : | தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம். |
| இயற்றிய நூல் | : | பூங்கொடி, காவியப்பாவை வீரகாவியம், முடியரசன் கவிதைகள் முதலியன |
| பணி | : | தமிழாசிரியர், மீ.சு.உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி |
| பட்டம் | : | பறம்புமலையில் நடந்த விழாவில் கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பெற்றது. |
| பரிசு | : | "பூங்கொடி" என்னும் காவியத்துக்காக 1966 இல் தமிழக அரசு, பரிசு வழங்கியது. |
| சிறப்பு | : | பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர். |
| காலம் | : | 07.10.1920 முதல் 03.12.1998 வரை. |

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

தமிழக அரசின் பரிசைப் பெற்ற முடியரசனின் காவியம் (GTGS-2022)

அ) விர காவியம்
ஆ) காவியப்பாவை
இ) பூங்கொடி
ஈ) கொடிமுல்லை
உ) விடை தெரியவில்லை

தமிழக அரசின் பரிசுபெற்ற முடியரசனின் காவியது எது? (AJGST 2019)

அ) தேன்மழை
ஆ) பால்வீதி
இ) எழிலோவியம்
ஈ) பூங்கொடி
உ) விடை தெரியவில்லை

குன்றக்குடி அடிகளாரால் 'கவியரசு' என்னும் பட்டம் பெற்றவர் (EO4GT-2019)

அ) ந.பிச்சமூர்த்தி
ஆ) கவிஞர் சுரதா
இ) பாரதிதாசன்
ஈ) முடியரசன்

தமிழக அரசின் பரிசு பெற்ற முடியரசனின் காவியம் எது? (EO4GT-2017)

அ) சகலகலா வல்லி மாலை
ஆ) பூங்கொடி
இ) மணிக்கொடி
ஈ) உரிமை வேட்கை

காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் (GRFT3 - 2016)

அ) சுரதா
ஆ) கண்ணதாசன்
இ) முடியரசன்
ஈ) நா.காமராசன்

குன்றக்குடி அடிகளாரால் 'கவியரசு' என்ற பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது? (GTPA-13 2014)

அ) வைரமுத்து
ஆ) கண்ணதாசன்
இ) வாணிதாசன்
ஈ) முடியரசன்

### யார் கவிஞன்?

காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
கைம்மாறு விழைந்துபுகழ் பெறுதல் வேண்டி
மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்தி விட்டுத்
தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்;

ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவ ரேனும்
ஆள்களனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்;
மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது
காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக்
கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்;
தாழ்ச்சிசொலும் அடிமையலன் மக்கட் கெல்லாம்
தலைவனெனப் பாடுபவன் கவிஞன், வீரன்.

- முடியரசன்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"காட்சிக்கு புலியாகிக் கொடுமை மாளக் கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்" என்று கூறியவர் (EO3GS-2022)

அ) கண்ணதாசன்
ஆ) வாணிதாசன்
இ) முடியரசன்
ஈ) பாவாணர்
உ) விடை தெரியவில்லை

"ஆட்சிக்கும் அஞ்சாமல் யாவரேனும் ஆள்கவெனத் துஞ்சாமல், தனது நாட்டின்

மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவான்" -என்று பாடியவர் யார்? (GT112-2013)

அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன்

இ) முடியரசன் ஈ) பாரதியார்

பொருள் :

செல்வத்துக்காகவும் பயனும் புகழும் கருதியும் குற்றமில்லாத கொள்கைக்கு மாறாக மனச்சான்றை மறைத்தும், தன்னலத்துக்காக நாடு, இனத்தை இழிவுபடுத்திக் கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்படுபவராய், தகுதியற்றவரை வலிந்து போற்றிச் செல்வம் திரட்டப் பாடுபவன் கவிஞன் அல்லன்.

ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு அஞ்சாமல், எவர் ஆண்டாலென்ன என இருந்துவிடாமல், தன் நாட்டின் மேன்மைக்குக் குரல் கொடுப்பவனே கவிஞன் ஆவான். கொடுமைகளைக்கண்டு மனங்கொதித்துப் புலியாகி, அக்கொடுமைகள் நீங்குமாறு பாடல்கள் தீட்டுவோனே கவிஞன் ஆவான். எதற்கும் தலைவணங்கும் அடிமையாகாமல், மக்களின் தலைவனாகத் தன்னை எண்ணிப் பாடுபவனே உண்மை மறவன்; அவனே கவிஞன்.

**பழசு**

## இக்காலக் கவிதைகள்

ஒன்பதாம் வகுப்பு - உரைநடை

புலவர் குழந்தை, முடியரசன் முதலியோர் கவிதைகளில் பகுத்தறிவு நோக்கும் முற்போக்குச் சிந்தனையும் தமிழுணர்வும் இலங்கக் காணலாம்.

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி ?

இவ்வடிகள் முடியரசனின் தணியாத தண்டமிழ்க் காதலை வலியுறுத்தும்.

**பழசு**

## முடியரசன் கவிதை

ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்பு

"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்"
- முடியரசன்

### நிலமகளே வெல்வாள்!

நமக்கென்றே இருப்பவளை வாழ்நாள் எல்லாம்
நலிவுறுத்தி வருகின்றோம்; தலை யிடத்துச்
சுமக்கவென மரம்வைத்தோம்; மனைகள் கட்டத்
தூண்வைத்தோம்; கல்வைத்தோம்; காலும் வைத்தோம்
எமக்கென்ன என்றவள்மேல் உமிழு கின்றோம்;
இரும்பெடுத்தே அவளுடலை அகழு கின்றோம்;
சுமக்கின்றாள்; பொறுக்கின்றாள்; பொறுமை சாலி!
தொழிலாளி போலிருக்கும் திறமை சாலி!

கடல்சுமந்தாள்; மலைசுமந்தாள்; கான்சு மந்தாள்;
கால்நடைகள் பலசுமந்தாள்; மாந்தர் என்ற
உடல்சுமந்தாள்; வயல்சுமந்தாள்; நதிசு மந்தாள்;
ஊர்சுமந்தாள், நகர்சுமந்தாள்; செடிசு மந்தாள்;
குடல்சுமந்து பெற்றெடுத்த அன்னை இல்லாக்
குலப்பிள்ளை போலாகி நின்றாள்; அந்தோ!
மிடல்சுமந்த அவள்உறுத்துச் சினந்து நின்றால்
மேலாளர் வாழ்வெங்கே? அவளே வெல்வாள்!
- முடியரசன், மனிதனைத் தேடுகின்றேன். ₉₀

## தமிழ் ஒளி

**புதுசு**

## பட்ட மரம்

ஒன்பதாம் வகுப்பு - செய்யுள்

கவிஞர் தமிழ் ஒளி (1924-1965)

- கவிஞர் தமிழ் ஒளி புதுவையில் பிறந்தவர்.
- பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர்; மக்களுக்காகப் பல படைப்புகளை உருவாக்கியவர்.

### பட்ட மரம்

நம் முன்னோரின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது. அவர்கள் மரம், செடி, கொடிகளையும் போற்றிக்காத்தனர். கால மாற்றத்தில் இவ்வாழ்வு சிறிது சிறிதாக மறைந்துகொண்டே வருகிறது. மரம் என்பது மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாதது. மரங்கள் இல்லை என்றால் நமக்கு உயிர்வளி கிடைக்காமல் போய்விடும். அவ்வகையில் பட்டுப்போன மரமொன்று கவிஞர் ஒருவரின் உள்ளத்தில் ஏற்படுத்திய குமுறலை வெளிப்படுத்தும் இக்கவிதை, மரங்களை வளர்த்துப் பேணிக் காத்திட வேண்டும் என்ற உணர்வை நமக்கு ஏற்படுத்துகிறது.

மொட்டைக் கிளையொடு
நின்று தினம்பெரு
மூச்சு விடும்மரமே!
வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந்தனையோ?
குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்தஇலை!
வெந்து கருகிட
இந்த நிறம்வர
வெம்பிக் குமைந்தனையோ?
கட்டை யெனும்பெயர்
உற்றுக் கொடுந்துயர்

பட்டுக் கருகினையே!
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!

காலம் எனும்புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் ஒருமனிதன்
ஓலமி டக்கரம்
நீட்டிய போல்இடர்
எய்தி உழன்றனையே!
பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்ததுவும்
மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்ததுவும்
ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்ததுவும்
ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே!

## உருத்திரங்கண்ணனார்

**புதுசு**

### கலங்கரை விளக்கம்

ஏழாம் வகுப்பு - செய்யுள்

**பெரும்பாணாற்றுப்படை**

- பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் தொண்டைமான் இளந்திரையன்.

**கடியலூர் உருத்திரங்கண்ணனார்**

- கடியலூர் உருத்திரங்கண்ணனார் சங்ககாலப் புலவர்.
- இவர் கடியலூர் என்ற ஊரில் வாழ்ந்தவர்.
- இவர் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

**ஆற்றுப்படை இலக்கியம்**

- வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.

**பெரும்பாணாற்றுப்படை**
**- கடியலூர் உருத்திரங் கண்ணனார்**

கடலும் கடல்சார்ந்த இடமும் தமிழரின் வாழ்நிலங்களுள் ஒன்று. கடலோடு வாழ்ந்த தமிழர், தம் தொழில்நுட்ப அறிவால் கலம் படைத்து, அதனைக் கொண்டு மீன்பிடித்தும், வணிகம் செய்தும் வாழ்ந்து வந்தனர். கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில்நுட்பமே, கலங்கரை விளக்கம். அது குறித்துச் சங்கப் பாடல் விளக்குவதைக் காண்போம்.

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை......

(இந்நூலின் 346 முதல் 351 வரை உள்ள அடிகள் இங்குத் தரப்பட்டுள்ளன.)

**பாடலின் பொருள்**

கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழுந்துவிடாமல் தாங்கிக் கொண்டிருக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது; ஏணி கொண்டு ஏறமுடியாத உயரத்தைக் கொண்டிருக்கிறது; வேயப்படாமல் சாந்து பூசப்பட்ட விண்ணை முட்டும் மாடத்தை உடையது. அம்மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறைமுகம் அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறைமுகம் நோக்கி அழைக்கிறது.

## கி.வா.ஜகந்நாதர்

**புதுசு**

### வயலும் வாழ்வும்

ஏழாம் வகுப்பு - செய்யுள்

**நாட்டுப்புறப் பாடல்**

- நாட்டுப்புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடும் பாடலே நாட்டுப்புறப்பாடல் எனப்படுகிறது. இதனை வாய்மொழி இலக்கியம் என்றும் வழங்குவர்.

**வயலும் வாழ்வும்**

உலகில் பலவகையான தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் பசிதீர்க்கும் தொழிலாகிய உழவுத்தொழில் முதன்மையானதாகும். நிலத்தைத் தெரிவு செய்தல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல், நீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல், போரடித்தல், நெல்பெறுதல் ஆகியன உழவுத்தொழிலின் செயல்பாடுகள் ஆகும். இவற்றைப் பற்றிய நாட்டுப்புறப்பாடல் ஒன்றை அறிவோம்.

ஓடை எல்லாம் தாண்டிப்போயி - ஏலேலங்கிடி ஏலேலோ
ஒண்ணரைக்குழி நிலமும் பார்த்து - ஏலேலங்கிடி ஏலேலோ
சீலையெல்லாம் வரிஞ்சுக்கட்டி - ஏலேலங்கிடி ஏலேலோ
சேத்துக்குள்ளே இறங்குறாங்க - ஏலேலங்கிடி ஏலேலோ

நாத்தெல்லாம் பிடுங்கையிலே - ஏலேலங்கிடி ஏலேலோ
நண்டும் சேர்த்துப் பிடிக்கிறாங்க - ஏலேலங்கிடி ஏலேலோ
ஒருசாணுக்கு ஒரு நாற்றுத்தான் - ஏலேலங்கிடி ஏலேலோ
ஓடியோடி நட்டோமையா - ஏலேலங்கிடி ஏலேலோ

மடமடன்னு மடைவழியே - ஏலேலங்கிடி ஏலேலோ

மண்குளிரத் தண்ணிர்பாய - ஏலேலங்கிடி ஏலேலோ
சாலுசாலாத் தாளுவிட்டு - ஏலேலங்கிடி ஏலேலோ
நாலுநாலா வளருதம்மா - ஏலேலங்கிடி ஏலேலோ

மணிபோலப் பால்பிடித்து - ஏலேலங்கிடி ஏலேலோ
மனதையெல்லாம் மயக்குதம்மா - ஏலேலங்கிடி ஏலேலோ
அறுப்பறுக்க ஆளுக்கெல்லாம் - ஏலேலங்கிடி ஏலேலோ
ஆளுபணம் கொடுத்துவாரான் - ஏலேலங்கிடி ஏலேலோ

சும்மாடும் தேர்ந்தெடுத்து - ஏலேலங்கிடி ஏலேலோ
சுறுசுறுப்பாய்க் கொண்டு போனார் - ஏலேலங்கிடி ஏலேலோ
கிழக்கத்தி மாடெல்லாம் - ஏலேலங்கிடி ஏலேலோ
கீழே பார்த்து மிதிக்குதையா - ஏலேலங்கிடி ஏலேலோ

கால்படவும் கதிருபூரா - ஏலேலங்கிடி ஏலேலோ
கழலுதையா மணிமணியா - ஏலேலங்கிடி ஏலேலோ

தொகுப்பாசிரியர் - கி.வா. ஜகந்நாதன்

(பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப்பாடல்களை மலை அருவி என்னும் நூலில் கி.வா.ஜகந்நாதன் தொகுத்துள்ளார். அந்நூலில் உள்ள உழவுத்தொழில் பற்றிய பாடல் இன்று இங்குத் தரப்பட்டுள்ளது.)

**பாடலின் பொருள்**

உழவு செய்யும் மக்கள் ஓடையைக் கடந்து சென்று ஒன்றரைக் குழி நிலத்தைத் தேர்ந்தெடுத்தனர். பெண்கள் புடவையை இறுகக்கட்டி நடவு செய்ய வயலில் இறங்கினர். நாற்றுப் பறிக்கும்போது ஆண்களும் பெண்களும் வயல் வரப்பில் உள்ள நண்டுகளையும் பிடித்தனர்.

ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் சுறுசுறுப்பாக நட்டனர். நடவு நட்ட வயலின் மண்குளிருமாறு மடைவழியே நீர்பாய்ச்சினர். நட்ட நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தன. பால் பிடித்து முற்றிய நெல்மணிகள் மனம் மயங்குமாறு விளைந்தன. அறுவடை செய்யும் ஆட்களுக்குப் பணம் கொடுத்தனர். அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டித் தலைக்குச் சும்மாடு வைத்துத் தூக்கிச் சென்று களத்தில் சேர்த்தனர். கதிரடித்த நெல்தாள்களைக் கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்தனர். மாடுகள் மிதித்த நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன.

**போரடித்தல்**

அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர். நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர். இதற்குப் போரடித்தல் என்று பெயர்.

மாடுகட்டிப் போரடித்தால் மாளாது
செந்நெல்லென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை
(நாட்டுப்புறப்பாடல்)

**நாமக்கல் கவிஞர்**

புதுக

## எங்கள் தமிழ்

ஏழாம் வகுப்பு

**நாமக்கல் கவிஞர் வெ இராமலிங்கனார்**

- இவர் தமிழறிஞர் கவிஞர் விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர்.
- காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் காந்தியக்கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.
- தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.
- மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர் (CCS2T-2022)

அ) பாரதியார்
ஆ) கண்ணதாசன்
இ) வெ.இராமலிங்கனார்
ஈ) பாரதிதாசன்
உ) விடை தெரியவில்லை

**எங்கள் தமிழ்**
**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

உலக மொழிகளில் தொன்மையானது நம் தமிழ்மொழி. அது மென்மையும் இனிமையும் வளமையும் உடையது. வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது; காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று, என்றும் இளமையோடு திகழ்வது. அத்தகு தமிழ்மொழியின் சிறப்பை நாமக்கல் கவிஞரின் பாடல் மூலம் அறிவோம்.

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

(நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்துத் தரப்பட்டுள்ளது.)

பாடலின் பொருள்

நம் தாய்மொழியாம் தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது. தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்; அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி ஆகும்.

## புதுசு — நாமக்கல் கவிஞர் பாடல்

ஏழாம் வகுப்பு

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!... (கத்தியின்றி...)

கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட!... (கத்தியின்றி...)

- நாமக்கல் கவிஞர்

## பழசு — பெண்மை

ஒன்பதாம் வகுப்பு - செய்யுள்

### கவிஞர் வெ.இராமலிங்கனார்

நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூரில் பிறந்தவர். இவர்தம் பெற்றோர் வெங்கட்ராமன்-அம்மணி அம்மாள் ஆவர். இவர், கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றார்; தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கிச் சிறப்பித்தது. இவர், தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப்படுகிறார். இவரின் காலம் கி.பி.1888 முதல் 1972 வரையாகும்.

### TNPSC Old Questions
### பொதுத்தமிழ்

தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர் யார்? (EO4GT-2017)

அ) கவிஞர் முத்துலிங்கம்

ஆ) கவியரசர் கண்ணதாசன்

**இ) கவிஞர் வெ.இராமலிங்கனார்**

ஈ) கவிஞர் பாரதிதாசன்

### நாமக்கல் கவிஞர் பாடல்கள்

நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் தெய்வத் திருமலர், தமிழ்த்தேன் மலர், காந்தி மலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசை மலர், அறிவுரை மலர், பல்சுவை மலர் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன.

### நாமக்கல்லாரின் படைப்புகள் :

| | |
|---|---|
| இசைநாவல்கள் | 3 |
| கட்டுரைகள் | 12 |
| தன்வரலாறு | 3 |
| புதினங்கள் | 5 |
| இலக்கியத்திறனாய்வுகள் | 7 |
| கவிதைத்தொகுப்புகள் | 10 |
| சிறுகாப்பியங்கள் | 5 |
| மொழிபெயர்ப்புகள் | 4 |

### TNPSC Old Questions
### பொதுத்தமிழ்

நாமக்கல் கவிஞரின் படைப்புகளின் எண்ணிக்கையை பொருத்துக. (CCSFT-2018)

a) இசை நாவல்கள் — 1. நான்கு
b) புதினங்கள் — 2. பத்து
c) கவிதைத் தொகுப்புகள் — 3. மூன்று
d) மொழிபெயர்ப்புகள் — 4. ஐந்து

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 1 | 2 |
| **ஆ)** | **3** | **4** | **2** | **1** |
| இ) | 2 | 4 | 1 | 3 |
| ஈ) | 3 | 1 | 4 | 2 |

### பெண்மை

அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்
உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும்
தன்னல மறுப்பும் சகிப்புத் தன்மையும்
இயல்பாய் அமைந்தும் இன்பசொ ரூபமாய்த்
தாயாய் நின்று தரணியைத் தாங்கும்;
தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்;
உடன்பிறப் பாகி உறுதுணை புரியும்;
மகளாய்ப் பிறந்து சேவையில் மகிழும்;
அயலார் தமக்கும் அன்பே செய்யும்;
நாணம் கெடாமல் நட்புகொண் டாடும்.

- வெ.இராமலிங்கனார்

(நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் இப்பாடல், சமுதாய மலர் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.)

நாமக்கல் கவிஞரின் கவிதைகளை முதன்முதல் வெளியிட்ட பத்திரிக்கை – லோகோபகாரி

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"அயலார் தமக்கும் அன்பே செய்யும் நாணம் கெடாமல் நட்பு கொண்டாடும்"-பெண்மையை இப்படிப் புகழ்ந்தவர் (EO4GT-2017)

அ) நாமக்கல் கவிஞர் ஆ) கவிமணி
இ) பாரதிதாசன் ஈ) வைரமுத்து

**பொருள் :**

இப்பாடலில் தாய், மனைவி, தமக்கை, தங்கை, மகள் எனப் பெண்மைக்குப் பன்முகங்கள் உண்டு என்பதனை நாமக்கல் கவிஞர் எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்பு, ஆர்வம், அடக்கம் முதலியன பெண்மையின் பண்புகளாகும். உண்மைத்தன்மையும் உள்ள உறுதியும் தன்னலமில்லாது குடும்பநலம் பேணுதலும், யார் எது செய்யினும் பொறுத்துக்கொள்ளும் தன்மையும் அமைந்து, தாய் என்னும் அன்பு வடிவில் இவ்வுலகைத் தாங்குபவள் பெண்ணே.

கணவன் மனம் தளரும்போதெல்லாம் அவனது கவலைக்கு மருந்தாக இருப்பவள் மனைவி. தமக்கையோ தங்கையோ உடன்பிறந்தானுக்கு உறுதுணையாகத் திகழ்கிறாள். மகளாகப் பிறந்து தந்தைக்குப் பணிவிடை செய்து மகிழ்பவளும் பெண்ணே. அயலாரிடத்து அன்பு காட்டியும் தனக்கே உரிய நாணம் கெடாது நட்புக் கொள்வதும் பெண்மையின் சிறந்த பண்புகளாகும்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க. (G2AT16)

| | பட்டியல் ஒன்று | | பட்டியல் இரண்டு |
|---|---|---|---|
| a) | பெண்மை தாயாய் நின்று | 1. | அன்பே செய்யும் |
| b) | பெண்மை அயலார் தமக்கும் | 2. | தரணியைத் தாங்கும் |
| c) | பெண்மை மகளாய்ப் பிறந்து | 3. | தளர்வைப் போக்கும் |
| d) | பெண்மை தாரமாய் வந்து | 4. | சேவையில் மகிழும் |

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 2 | 4 | 1 | 3 |
| இ) | 2 | 1 | 4 | 3 |
| ஈ) | 1 | 3 | 2 | 4 |

"பெண்மைக்குப் பன்முகங்கள் உண்டு" எனக் கூறியவர் (AJGST-2016)

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வெ.இராமலிங்கனார் ஈ) சுரதா

பழகு

## இக்காலக் கவிதைகள்

ஒன்பதாம் வகுப்பு - உரைநடை

விடுதலை இயக்கக் கவிஞர்களுள் ஒருவர் நாமக்கல் கவிஞர். இவர்தம் கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன. இவர், தமிழரின் சிறப்பையும் தமிழ்மொழியின் இனிமையையும் சேர்த்துப் பாடினார்.

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்

சமுதாயத்தின்மீது அக்கறையுள்ள அவர், பின்வருமாறு பாடியுள்ளார்.

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்

வாழ்க்கை சிறக்க ஒவ்வொருவரும் ஒரு தொழிலையாவது கற்றுக்கொள்வது நல்லது என வலியுறுத்தும் நாமக்கல்லாரின் கவிதை வருமாறு :

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்

### புத்தகப் பயிற்சி வினாக்கள்

காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ______ (VSGS/2023)

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

விடை : அ)

கல்யாணசுந்தரம் எந்த வயதில் தன் முதற்கவிதையை இயற்றினார்?

அ) பன்னிரண்டு ஆ) பதினான்கு
இ) பதினொன்று ஈ) பதினாறு

விடை : ஆ)

கல்யாணசுந்தரத்துக்கு வழங்கப்படும் அடைமொழி என்ன?

அ) மக்கள் கவிஞர் ஆ) புரட்சிக் கவிஞர்
இ) காந்தியக் கவிஞர் ஈ) பாவலரேறு

விடை : அ)

கல்யாணசுந்தரம் யாரிடம் பாடம் கேட்டார்?

அ) சுரதா ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) பாரதியார்



நாமக்கல் கவிஞர் பெற்ற விருது – பத்மபூஷண் விருது
எந்த கட்சியில் உறுப்பினர் – INC

விடை : ஆ)

கல்யாணசுந்தரத்தின் சொந்த ஊர் எது?

அ) திருவையாறு ஆ) பட்டுக்கோட்டை

இ) கும்பகோணம் ஈ) தேனி

விடை : ஆ)

பொருத்துக.

| | | |
|---|---|---|
| "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே" | - | கவிமணி |
| "சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்" | - | நாமக்கல் கவிஞர் |
| "பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்" | - | பாரதியார் |
| "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்" | - | பாரதிதாசன் |
| "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" | - | கண்ணதாசன் |

விடை :

| | | |
|---|---|---|
| "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே" | - | பாரதிதாசன் |
| "சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்" | - | கவிமணி |
| "பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்" | - | நாமக்கல் கவிஞர் |
| "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்" | - | கண்ணதாசன் |
| "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" | - | பாரதியார் |